# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் ௨௰ | தாரண பங்குனி— 1945—மார்ச்சு | மலர் ௰௨ |


## தமிழ் எழுத்தில் திருத்தமா ?

தமிழ் எழுத்தில் திருத்தமா என்னும் தலைப்பிற்சென்ற தைத் திங்கள் தமிழ்ப் பொழிலில் யாம் எழுதியிருந்த கட்டுரையைப் படித்துணர்ந்த தமிழுணர்ச்சி மிக்க தமிழறிஞர் பலர், தொடர்ந்து அவ்வாராய்ச்சி யுரையை எழுதும்வண்ணம் எம்மை வேண்டியும் பாராட்டியும் மடல் வரைந்துள்ளனர். இஃது, இங்ஙனமாக, சில நாள்வெளியீட்டு இதழாசிரியர்களுக்கு எம் எழுத்துணர்வு வெறுப்புணர்வினை விளைத்தது போலும்! அவர்கள் சீற்றமிக் கூர்ந்து தமிழ்ப்பண்டிதர்கள் குறுகிய நோக்குடையவர்கள் என்றும், தமிழை வளரவிடாது தடைசெய்யும் தடைகற்போல் உள்ளார் என்றும், இலக்கணம் இலக்கணம் என்று எதற்கெடுத்தாலும் இலக்கணத்தைக் கொண்டுவந்து மிரட்டுகின்றனர் என்றும் மனம்போனவாறு வரைந்துள்ளனர். எழுத இறகேந்தும் ஆசிரியர்கள், மேடையிற் பேசும் பேச்சாளர்கள் உன்[illegible] உளங்கொளவேண்டிய தொன்றினைமட்டும் யாம் உணர்த்த விரும்புகின்றோம். **"தமிழே உயிர் தமிழுயர்வே எம்முயர்வு; தமிழ் மொழியின் தாழ்வே எம் தாழ்வு"** எனத் தமிழைப் போற்றிய போற்றி வருகின்றவர்களை இழிவுரை கொடு சாடினால் ஏற்றம் யார்க்கென்பதனை எண்ணியுளங்கொள வேண்டுகின்றோம். வசவு இருவர்க்கும் பொதுவன்றோ ? தமிழ்ப்புலவர்களைவிட வசைபாடுதலில் இந்நாள் வெளியீட்டாசிரியர் வல்லார்போலும்!

தமிழ்மொழியில் பிறமொழிச் சொற்களிற் காணப்பெறும் பொருள்களைக் குறிக்குஞ் சொற்கேற்ற சொல்லில்லையாயின் அப்பிறமொழிச் சொல்லை யாம் அப்படியே வாங்கி வழங்கலாம் எனவுஞ்சிலர் கூறுகின்றனர். மேலும் நம் தமிழ் மொழியில் பிறமொழியாளர் குறிப்பிடும் பொருளைக் குறிக்கும் சொல்லையாக்க அப்பொருள் தரும் — ஒலிதரும் எழுத்தில்லையாதலின் நம் தமிழ்மொழியில் உள்ள எழுத்துக்கட்குக் கோடிட்டு வழங்கலாம் எனவுங் கூறுகின்றனர். பிறநாட்டில் புதிது புதிதாகக் கண்டுபிடித்து நாளும் வழங்கிவரும் பொருளைக் குறிக்க நம் தமிழ்மொழியில் சொல்லில்லையாயின் யாம் புதிய புதிய சொற்களை ஆக்கி அப் பொருள்களுக்குப் பெயரிட வேண்டுமேயன்றி அவர் நாட்டு மொழிச்சொற்களை அப்படியே கடன் வாங்கி நம் தமிழ் மொழியின்கண் அமைத்துக்கொள்ளுதல் எவ்வாற்றானும் அமைதியுடைத்தன்றாம்.

யப்பானியர்களுடைய முயற்சியையும் மொழிப் பற்றையும் நோக்குங்கள்! அந்நாட்டில், யப்பான் நாட்டு மொழியில் மிக மிகத் தேர்ந்த பெருமக்களை அந்நாட்டுக் கடற்கரையில் பிறநாட்டுப் பொருளிறங்கும் வாயிலில் இருந்து சுங்கவரி விதித்துப் பெயர்

பொறித்துப் பொருள்களை யப்பான் நாட்டிற்குள் புகவிட அமைத்துள்ளனர். அங்ஙனம் மொழிநுட்பம் அறிந்த அப்பெருமக்களுக்கு, அவ்வரசியலில் உள்ள மதிப்பினைப் பாருங்கள்! எந்நாட்டிலிருந்து எப்பொருள் எப்பெயருடன் யப்பான்நாட்டின் கடற்கரையில் இறங்கினும் அப்பொருட்கு அக் கடற்கரையில் அமைந்துள்ள பெருமக்கள் தங்கள் மொழியொலியமையத் தங்கள் மொழியில் எப்பெயரை எழுதி அப்பொருளின்மேல் ஒட்டி நாட்டிற்குள் அனுப்புகின்றனரோ அப் பெயரையே அப்பொருட்கு அந்நாட்டு அரசியலாரும் நாட்டுமக்களும் ஏற்றுக்கொண்டு நாளும் வழங்கி வருகின்றனர். என்னே அவர்தம் தாய் மொழிப்பற்று. இஃதன்றோ அந்நாட்டுமக்களின் உலையா முயற்சியையும் மொழிப்பற்றையும் காட்டுகின்றது! யாமும் நம் நாட்டின் ஆட்சி யுரிமையைப்பெற்றால் நம் தமிழ் நாட்டில் பிற நாட்டிலிருந்து வந்திறங்கும் பொருட்கு இவ்விப் பெயரோடு தாம் இவ்விப்பொருள் வழங்கலாம் என யப்பானியரைப் போலப் பெயரிட்டு அப்பெயருடன் அப்பொருள்கள் வழங்க விதி செய்யலாமன்றே?

பிற மொழியிலுள்ள எழுத்தொலிகள் தமிழ் எழுத்துக்களில் இல்லையாதலின், கீழே கோடிடுவோம் என்பார் வடமொழி எழுத்தொலிகளையும் பிறமொழி எழுத்தொலிகளையும் ஒற்றியறிய வேண்டுகின்றோம். நம் தமிழ் மொழியில் யாம் 'வாழ்' என்று கூறுவோமானால் தமிழ் மொழிக்கே சிறப்பாயுரிய 'ழ' கர ஒலி வடமொழி எழுத்துக்களுள் இல்லையாதலின் வடமொழியாளர் 'வால்' என்றே கூறுவார்கள். தமிழ் மொழியில் 'புளி' என்று கூறுவோமானால் வடமொழியாளர் 'புலி' என்றே கூறுவாளர்கள். நம் மொழியில் ளகர ஒலி வேறாகவும், லகர ஒலி வேறாகவும் திருத்தமுற அமைந்தாற்போல வடமொழியில் லகர ஒலி வேறு ளகர ஒலி வேறு அமையவில்லை யாதலின் இவ்வொலி யமைய அம்மொழியாளர் அவர் மொழியில் உச்சரிக்க இயலாதவராயுள்ளனர். யாம் வடமொழியாளரை நோக்கி உங்கள் மொழியில் ழகர ஒலி லகர ளகர வேறுபாட்டொலிகள் இல்லையாதலின் நீவிர் உம்மொழி எழுத்துக்களுக்குக் கோடு போட்டு எழுத்துக்களை ஒலிக்க ஒருப்படுமின்! இன்றேல் ழகர எழுத் எழுத்தைக் கடனாகப் பெற்றுக் கொள்ளுமின்! என்று கூறுவோமானால் அவர் நம்மை எள்ளி நகைப்பரன்றோ?

மற்றுஞ் சிலர் தமிழ் மொழியில் எழுத்துக்கள் மிக்கு உள்ளன எனவும், ஆங்கிலமொழி இருபத்தாறு எழுத்துக்களில் இயங்குகின்றாற்போலத் தமிழ் மொழி எழுத்துக்களையும் குறைத்துக்கொள்ள வேண்டும் எனவும், இங்ஙனம் செய்தால் தமிழ் எழுத்துக் கோவை செய்தற்கும், தமிழ் எழுத்துப்பொறி (Tamil type writing machine) யில் எழுத்துக்களை அமைப்பதற்கும் எளிதாக இயலும் எனவுங்கூறுகின்றனர். சீன மொழியில் உள்ள எழுத்துக்கள் 40,000 ஆகும். அம்மொழியில் ஒருவன் சிறிது அறிவுபெறவேண்டினும் ஏறக்குறைய 4,000 எழுத்துக்களையேனும் அறிந்திருக்கவேண்டும். இங்ஙனம் மிக்க எழுத்துக்களைக்கொண்ட சீனமொழியிலுள்ள எழுத்துக்களைக் குறைக்க வேண்டுமென்று யாரேனும் முயற்சித்தனரோ? இது குறித்

துச் சீனர்களை நோக்கி எம்மொழியிலும் காணப்பெருத இத்துணை ஆயிரம் எழுத்துக்கள் நும்மொழிக்கு மட்டும் ஏன்? சில எழுத்துக் களைக் குறைத்துக்கொள்வீராக! என வேண்டுகோள் விடுப்பர் போலும்! முப்பது எழுத்துக்கள் மிகையென்பார் 40,000 எழுத்துக் களைக் கொண்ட மொழியை என் கூறுவரோ! பிறமொழி ஒலி அமைக்க, சில எழுத்துக்கட்குக் கீழே கோடு போடவேண்டுமென்பார் ஆங்கில மொழியின் ஒலியமைப்பை ஆய்ந்து நோக்கவேண்டுகின்ருேம். ஆங்கில மொழியில் எல்லா ஒலிகளுக்கும் குறியீடு இல்லையாதலின், வட இங்கிலாந்து தேயத்தவரின் ஆங்கிலமொழி உச்சரிப்பிற்கும், தென் இங்கிலாந்து தேயத்தவரின் ஆங்கிலமொழி உச்சரிப்பிற்கும் ஸ்காட்லாந்து தேயத்தவரின் ஆங்கிலமொழி உச்சரிப்பிற்கும் வேறு பாடுகள் மிக்குள்ளன. இவ்வேறுபாட்டுள் இங்கிலாந்து தேயத்து மக்களுடைய மொழி உச்சரிப்பே சிறந்ததாகக் கருதப்பட்டு அகராதி களில் அமைக்கப்பெற்றுளது. ஆங்கில மொழியைத் தாய்மொழி யாகக்கொண்ட மேலைநாட்டு மக்களே ஆங்கில மொழியின் உச் சரிப்புபற்றி மாறறமுறும்பொழுது பிற நாட்டார் அம்மொழி ஒலி யமைய உச்சரிக்கவேண்டுமேல் எத்துணை விழிப்புடையராக இருத்தல் வேண்டும் என்பதை ஆய்ந்துணரவேண்டுகின்ருேம். இதனுலன்ருே மேலைநாட்டு மொழி உச்சரிப்பு குறித்து நூல்கள் பலவெளி வரலாயின.

(தொடரும்)

### தமிழ்ப் பண்ணை, மேட்டூர் அணை

## "தமிழ்த் தாத்தா" விற்குப் பணமுடிப்பு.

### பாராட்டு விழா - வேண்டுகோள்.

---

**தமிழன்பு மிக்க பெருமக்களே!**

**"தமிழரசி குறவஞ்சி"** என்னும் இனிய இலக்கியத்தை அருளி யுள்ள புலவர் பெருமானுன **தோரமங்கலம் "ஆசிரியர்" திரு. அ. வரத நஞ்சையப் பிள்ளையவர்களைப்** புலவர் உலகம் நன்கு அறியும். தமிழ்ப் பொதுமக்களிலும் ஒரு சில பகுதியினர் இவரது மாண்பை உணர்வர். ஆயினும் பெரும்பாலான மக்களைப் பொருத்தமட்டில் இவர் குடத்தி லிட்ட மணி விளக்குப்போல் உள்ளடங்கி விளங்குகிருர். இத்தகைய பெரியாரைக் குன்றிலிட்ட விளக்காகப் பொலிவுபெறச் செய்யா திருப்பது தமிழர்களின் குறையென்றே கூறவெண்டும்.

இப்பெரியார் நிறை குடத்திற்கு ஒப்பானவர். எனவே அலைப்பும் ஆடம்பரமும் இன்றி எளிய தோற்றத்துடன் இருப்பினும் தமிழில் முற்றறிவுப் பெருஞ்சுடர் என்று தேற்றமாகக் கூறலாம். எழுபது வயதிற்கு மேலாகியும் இளைஞர்க்கே உரிய தனிப்பட்ட உற்சாகமும், அவையோரின் உள்ளத்தைக் கவரக்கூடிய வகையில் ஆணித்தரமாக நயம்பொழியச் சொற்பொழிவாற்றும் பேராற்றலும், அவ்வாற்றலைக் கொண்டு தமிழ்த் தொண்டு செய்வதில் அயராத உழைப்பும் கொண்

டுள்ள திரு. வரதநஞ்சைய பிள்ளையவர்களைத் "தமிழ்த் தாத்தா" என்று கூறுவது மிகையாது. இவரது நுண்ணறிவை வியந்த புலவர் பெருமக்கள் ஒன்றுகூடி இவருக்கு "ஆசிரியர்" என்னும் சிறப்புப் பட்டம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

எவ்வளவு பெரிய நூலாயினும் எவ்வளவு நுண்ணிய கலை ஆயினும் அவற்றை எளிதில் அலைசிக் கரைகண்டு அரும்பெரும் கருத்துக்களை நயமாக மக்களின் உள்ளத்தில் ஏற்றக்கூடிய பண்பு இவரிடம் சிறந்து விளங்குகின்றது.

சுருங்கக் கூறினால் திரு. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் செஞ்சொற் கவிஞர்; நுண்ணிய புலவர்; ஈடற்ற எழுத்தாளர்; பீடுடைய பேச்சாளர்; சைவசித்தாந்தப் பேராசிரியர்; முதுமையிலும் அயராது பணியாற்றும் "தமிழ்த் தாத்தா".

இப்புலவர் பெருமான் சென்ற சில மாதங்களுக்கு முன் தம் பிடரியில் எழுந்த பிளவையினால் பெருந்துயர் உற்றுக் கூற்றுவனுடன் உயிருக்கு மன்றாடித் தமிழ்த்தாயின் அருளால் தமிழர் செய்த தவப்பேற்றால் - புத்துயிர் பெற்றார். இதனைப்பற்றி நண்பர் ஒருவருக்கு இப்பெரியார் எழுதிய கடிதத்தில், "தென்றிசைக்கோன் என்னை உமிழ்ந்துவிட்டான்!" என நயமாகக் குறித்திருந்தது நோக்கத்தக்கது.

தமிழ்ப்பணி செய்யும்பொருட்டே புத்துயிர் பெற்று விளங்கும் இக்கவிஞர் பெருமானைத் தனி மதிப்போடு பாராட்டவேண்டியது தமிழரின் கடமையாகும்.

எனவே தமிழ்ப்பண்ணையின் சார்பில் நடக்கும் தமிழ் இலக்கியத் தொடர் விழாவின் கடைசி நாளன்று (30-3-45) இப்புலவர் பெருமானைப் போற்றும் பொருட்டு ஓர் பாராட்டு விழாக் கொண்டாடி இவருக்குத் தக்கதோர் பணமுடிப்பு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள தமிழ் ஆர்வமிக்க பெருமக்களும். வள்ளல்களும்; சைவம் போற்றும் திரு மடாலயத் தலைவர்களும், தமிழ்க் கழகங்களும் ஏனையோரும் இப்பாராட்டு விழாவைத் தத்தமதாகக் கொண்டு, இப் பெரியாருக்காகத் தங்களாலியன்ற வகையில் பண உதவி செய்து பணமுடிப்பைச் சிறந்த பெரிய திரளாகச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

தமிழர்கள் இப்புலவருக்கு அளிக்கும் பணமுடிப்பால் பெறுதற்கரிய நன்மைகளை இவர்களின் புலமை உள்ளக் குளிர்ச்சியால் பெற முடியும் என்பது தேற்றம். தாங்கள் அளிக்க விரும்பும் நன்கொடையை, செயலாளர், "தமிழ்ப்பண்ணை" மேட்டூர் அணை P. O. என்ற முகவரிக்கு விரைவில் அனுப்புக.

திரு. வரதநஞ்சையப் பிள்ளையவர்களின் சுவைசெறிந்த வரலாற்றை ஒரு சுருக்க நூலாக வெளியிடக் கருதியுள்ளோம். இவரைப்பற்றி நன்கு அறிந்த புலவர்களும் நண்பர்களும் இவரது வாழ்க்கையில் தாம் கண்ட சுவையான நிகழ்ச்சிகளையும் இவரது

பேச்சித்திறன். கவித்திறன் முதலியவற்றையும் சுருக்கமாக எழுதியனுப்பினல் வரலாற்று நூலில் சேர்த்து வெளியிடலாம். இத்தகைய குறிப்புக்களை 10—3—45-க்குள் செயலாளருக்கு அனுப்பினல் நல்லது.

**"தமிழ்த் தாத்தா" திரு. வரதநஞ்சையப்பிள்ளை அவர்களின் புகழ் வாழ்க!**

தங்கள் அன்புள்ள "தமிழ் நற்பெருந் தொண்டன்"
**புந்தனேரி ரா. சுப்பிரமணியன்,**
செயலாளர்.

**தஞ்சைக் கரந்தைப் புலவர் கல்லூரி**

# இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

**ஏழாவது யாண்டு நிறைவு விழா.**

———

இக் கழகத்தின் ஏழாவதுயாண்டு நிறைவு விழா 11—3—45 ஞாயிறன்று மாலை, கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் பேரறிஞர். அ. சிதம்பரநாதச்செட்டியார் M.A., Ph.D. அவர்கள் தலைமையில் தமிழ் வாழ்த்துடன் தொடங்கப் பெற்றது. அதுபோழ்து கரந்தைப்புலவர் கல்லூரித் தலைவர் பண்டித P. R. மீனுட்சிசுந்தரம் பிள்ளை M.A., அவர்கள், தலைவரின் அறிவின் ஆழம், செயலாற்றும் திறம், பயிற்றும் வன்மை, சொல்லாற்றலின் இனிமை, விழுமிய பண்பு முதலிய இன்னோரன்னவற்றைத் தாம் மாணுக்கராக விருந்து பயின்ற ஞான்று அறிந்ததுணை எடுத்துக் கூறினர்கள். பின்னர், கழக அமைச்சர் இராமநாதன் ஆண்டறிக்கை வாசித்தும், விழா இனிதே நடைபெறுமாறு விழைந்து அனுப்பிய வாழ்த்துச் செய்திகளைப் படித்தும் வாழ்த்தயனுப்பிய பெரியர் ஈ. வே. ரா. திருவாளர்கள் ஆ. கார்மேகக் கோன், வித்துவான் உலகவூழியர், இரா. நெடுஞ்செழியன் B.A., (Hons) S. R. சுப்பிரமணியம், புதுக்கோட்டைத் தனியரசு மாணவர் நன்னெறிக் கழகத்தார் ஆகிய அனைவர்க்கும் நன்றியுங் கூறினர். பின்னர், தலைவரவர்கள் "எது தமிழிலக்கியம்" எனும் பொருள்பற்றிச் சிறந்த சொற்பெருக்காற்றினர். அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்:—

**மாணவர்களே! அன்பர்களே!**

"எது தமிழ் இலக்கியம்?" என்பதை வித்துவான் தேர்விற்குப் பயிலும் மாணவர்களாயஉங்கட்கு யான் சொல்லித்தெரிந்துகொள்ள வேண்டிய இன்றியமையாமையில்லை. நீங்கள் அத்தலைப்பைக் கொடுத்ததன் நோக்கம் என்ன என்பதை நோக்குழி உங்கட்கு ஏதோ ஓர் ஐயம் உண்டாயிருக்கின்றது என்பது புலனுகிறது. எது தமிழ் இலக்கியம்?" என்று வினு எழுப்புகின்ற காலத்து ஒன்றை மட்டும் சுட்டுதல்போல் தோன்றுகிறது. ஆனல் இனிமையும் அருமையு

முடைத்தான எண்ணிலா நூல்களுள் இதுதான் தமிழ் இலக்கியம் என்று ஒன்றை மாத்திரம் சுட்டவும் துணிவு பிறக்கவில்லை. யான் சிந்தித்தவரையில் ஊகித்து அறிவது ஒன்று. அஃதென்னையெனின், "தமிழ் எழுத்துக்களில் இயன்றுவிட்டால் மாத்திரம் அதனைத் தமிழ் இலக்கியம் என்று கூறத்தகுமா? என்ற ஐயம் உங்கள் உள்ளத்தில் எழுந்திருக்கக்கூடும் எனக் கருதுகின்றேன்.

தமிழ் எழுத்துக்களால் ஆகிவிட்டால் மட்டும் தமிழிலக்கியமாய் விடாது. தமிழனுக்கு உரித்தாய், தமிழ்ப் பண்புகள் நிறைந்து தமிழன் வாழ்க்கையை உயர்த்தும் நிலையிலில்லாவிட்டால் அதைத் தமிழ் இலக்கியம் என்று எப்படிக் கூறமுடியும்? இன்று இலக்கியமென வழங்கப் படுவனவற்றுள், புலவர் நாற்பத்தெண்மர் இறைவன் தலைமை தாங்கத் தமிழ்மொழி வளர்த்தாரென்பதை உண்மையெனக் கொளினும், அதே வரலாற்றைத் தேவபாடையின் எழுத்துக்கள் 48 வந்து இறைவனோடு 49 ஆயின என்று எழுதிவைத்திருந்தால் அதைத் தமிழ் இலக்கியம் என்று கூறமுடியுமா? எழுதியவர் யாவரேயாயினும் அதுபற்றிக் கவலையில்லை. இத்தகைய இலக்கியங்கள் எழுதியதற்கு உண்மைக் காரணம் காணப்புகின் அக்கால நிலை ஒன்றைத் தவிரவேறு சொல்ல முடியாது? சேக்கிழாரையோ, பரஞ்சோதி முனிவரையோ குறை கூறுவதாற் பயன் இல்லை. அவர்கள் வாழ்ந்த காலத்தோடு பட்டுயாத்தார்களாதலால் அக்காலத்தில் அவைகள் தமிழ் இலக்கியங்கள்தாம்! இக்காலத்தில் புராண ஒழிப்புவேலை விரைந்து பூழி வருவதை அறிவோம். அதனால் புராணங்களெல்லாம் அறவே ஒழியவேண்டுமென மதியற்க. தவிர, புராணம் என்றவுடன் சிறப்புச்செய்வதும் கூடாது.

பிற்காலப் புராணங்கட்குள்ள இழிதகவு பெரிய புராணத்திற்கு இல்லை. காரணம் என்னையெனில் பிற்காலப் புராணங்கள் பொருட்காகப் பாடப்பெற்றன எத்தனையோ ஸ்தல புராணங்கள். அவற்றையெல்லாம் தமிழ் இலக்கியம் என்று கூறுவதா? தமிழ் மக்கள் ஒழுக்கத்தைக் குறைப்பதும், மூட நம்பிக்கையை வளர்ப்பதும் ஸ்தல புராணங்களே என்பதை விருத்தாசலப் புராணம் படித்தார் உணர்வர். ஸ்தல புராணங்கள் தமிழருக்கு இழிவு தருதலும், ஆரியர்க்கு ஏற்றந் தருதலும் கண்கூடு என்பதை யாவரே மறுக்க வல்லார்? ஒவ்வொரு புராணத்திலும் முதலில், தேவபாடையிற் சொன்னதைத் தமிழில் கூறுகின்றேன் என்ற சொற்றொடரைக் காணுதல் கூடும். இத்தகைய குருட்டு மனப்பான்மையுள்ள புலவர்கள் செய்ததை இலக்கியமென்று ஏற்க எந்த உண்மை வீறுகொண்ட தமிழன் முன் வருவான்? இக்கொடுமைகள் கண்டே புராணம் யாவும் ஒழிக்கப்படவேண்டுமென்கிறனர். ஆனால் கம்பராமாயணம், பெரியபுராணம், எரிக்கப்படவேண்டுமென நாட்டில் கிளர்ச்சி இருந்து வருவது அறிந்ததே. உலகத்தில் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்படுவனவற்றுள் கம்பராமாயணமும் பெரியபுராணமும் இடம் பெற்றிருக்கின்றன ஆதலால் அவற்றை எரிக்கவேண்டும் என்னும் கொள்கையை ஒப்பமாட்டேன். கம்பராமாயணத்தில் தமிழருக்கு இழிவுதரும் பாக்களும், பகுத்தறிவுக் கொவ்வாக் கதைகளும், கடவுள் நூலெனப்போற்றி

வருதலையும் எவரும் ஒப்புக்கொள்ளவேண்டாம். ஆனல் இலக்கியத்தைப் படிக்கவேண்டுமென்பேன். சேக்கிழார் இறைவன் அடியெடுத்துக்கொடுக்கத் திருத்தொண்டர் புராணம் பாடினுர். அதனல் ஒவ்வொருவரும் அதிற்காணும் ஒவ்வோர் எழுத்தையும் நம்பவேண்டுமென்று சொல்லமாட்டேன் அதில் நாம் பயன்பெறத் தக்கனவும் உள என்பதை நீங்கள் அறிவீர்கள். அவற்றில் காணும் குறைகளை ஆசிரியர் பாடங் கற்பிக்கும் கால் கண்டித்துச் சொல்லவேண்டும். ஆரியர்கள் தேவபாடை என்று தங்கள் மொழியைச் சொல்லுவது கண்டு இவர்களும் சிவபெருமான் அகத்தியர்க்குணர்த்த அகத்தியரால் தமிழ் வந்தது எனக் கதைகட்டித் தமிழும் தேவபாடை எனக் கூறத் தொடங்கினர். செத்த மொழியை அவர்கள் தேவபாடை என வழங்குதல்கண்டு நந்தமிழ்மொழியின் தொன்மையைஅகத்தியர்காலத்திற்கு இழுத்துவருவதா? வடமொழியைத் தேவபாடை என்பதும் தமிழ் அதன் பிற்பட்டது என்பதும் கூறி வருதல்கண்டு கொதித்தவர் பலர் அந்த உணர்ச்சி இப்போது மட்டும் தோன்றியதெனக் கருதற்க! தமிழ்வளர்த்தபெரியார்செல்வகேசவராயமுதலியார்.1906-ஆம்யாண்டில் தாம் எழுதிய "Tamil an Essay" என்ற நூலில் "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்த குடமுனிக்கு .........என்ற பாடலைக்காட்டுவர். "இப்பாட்டைப்பார்த்தால் ஏட்டை மூடுவேன்" என்று அடிமை மோகத்தை வெறுத்துக் கூறியிருக்கின்ருர் என்ருல் அக்காலத்திலேயே இந்த உணர்ச்சி இருந்ததென்பது அறியக்கிடக்கின்றது. ஆனல் இவ்வுணர்வினைப் பரப்ப முடியவில்லை. பிறர் சூழ்ச்சியால் உள்ளத்தில் தோன்றி வெளிவராமலும், வெளிவந்து மறைக்கப்பட்டதும் எத்தனையோ இலக்கியங்கள். கம்பராமாயணம் எத்தனை தடைகட்கிடை அரங்கேற்றப்பட்டதென்பதை அறியும்போது கம்பன் எழுதிய உணர்ச்சியுள்ள ஏடுகளும் பல கெட்டிருக்கலாம் என நினைக்க இடமிருக்கிறது. கம்பன், சேக்கிழார், வில்லி இவர்களை அவர் அவர்கள் கவி நயங்கண்டு பாராட்டுகிருேம். இவையாவும் சங்க கால இலக்கியத்தினின்றும் எழுந்த ஊற்றுக்கள். சங்க கால இலக்கியங்களை நன்கு கற்றபின்னரே கம்பர், சேக்கிழார், வில்லி ஆகியோர் மக்கள் உளங்கவர நூல்யாத்தனர் என்பதை யான் காட்டும் சான்று தெளிவுபடுத்தும். கம்பர், கலைமகள், கருணையால் பாடினுர் என்பதை நம்பாதீர்கள்! அவர் யாத்த கவிகளே அவர் சங்க நூலினைக்கற்றுப் பாடியிருக்கிருர் என்பதை அறிவுறுத்தும். அயோத்தியா காண்டத்தில் கைகேயி இராமனுக்குக் கட்டளைப் பிறப்பிக்கின்ருள், அரசன் கூறினுன் என, அதனைக் கம்பர், "ஆழி சூழுலகமெல்லாம் பரதனேயாள நீ போய் .........ஏழிரண்டாண்டின்வா என்றியம்பினன் அரசன் என்ருள்" என நயந்தோன்றப் பதினுன்கு யாண்டு எனக்கூறவேண்டியதை ஏழிரண்டு யாண்டு எனக் கூறியிருக்கின்ருர். இத்தகைய நயத்தினைச் சிலப்பதிகாரத்தில் காண்கிருேம். கோவலன், கண்ணகி இருவரும் வாணிபத்தின் பொருட்டு மதுரை செல்லுங்கால், பழகாத வழியினைத் தொலைவுள்ளதெனக் கருதிய கண்ணகி, "இன்னும் எவ்வளவு தொலைவு நாம் அடையவிருக்கும் மதுரை" என வினவுகின்ருள்,

அதற்குக் கோவலன் அவள் ஆற்றும் வண்ணம் மறுமொழி தருவதாக இளங்கோவடிகள் காட்டுந்திறம் அறிந்து இன்புறற்பாலது. அஃதாவது, "ஆறைங்காத நம் அகனுட்டும்பர் நாறைங்கூந்தல் நணித்தென" என இளங்கோ எழுதினர். முப்பது காவதமெனின் மிகச் சோர்வள் எனக் கருதி ஆறைங்காவதமென நயமாகக் கூறியிருக்கின்ருர். இவ்வடியை நோக்கியே கம்பர் அவ்வடியை அமைத்தார் எனக்கூறின் தவருகுமோ? (தொடரும்)

# தமிழ் நாடகக்கலை 2-வது மாநாடு

## தஞ்சை.

---

இம்மாநாடு 31—3—45-ம் நாள்
நாடகக்கலைப் பேராசிரியர்,
இராவு பகதூர் **P. சம்பந்த முதலியார்** அவர்களின்
சீரிய தலைமையில்

**கரந்தைத் தமிழ்ச்சங்கத் தமிழ்ப்பெரு மன்றத்தில் நிகழ்வுறும்.**

நாடகப் பேராசிரியர்
திருவனந்தை இராவு பகதூர் **P. சுந்தரம் பிள்ளை**
அவர்களின் திருவுருவப்படத்தைத்
திருவிதாங்கூர் பல்கலைக்கழகப் பேராசிரியர்
**சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார்,** M.A., B.L., அவர்கள்
திறந்துவைக்க இசைந்துள்ளார்கள்.
மாநாட்டில் கலந்துநின்று சொற்பொழிவாற்றிச் சிறப்பிக்க
அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தமிழ்ப் பகுதித் தலைவர்
**திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் பிள்ளை** M.A., B.L., M.O.L.
அவர்களும், ஷெ பல்கலைக்கழக விரிவுரையாளர்
**ஜி. சுப்பிரமணிய பிள்ளை** M.A., B.L., அவர்களும்
வித்துவான். **அ. கிருட்டினமூர்த்தி** அவர்களும்,
மற்றும் பல அன்பர்களும் தமிழ் நாடாகாபிமானிகளும்
ஒப்பியுள்ளனர்.
அன்பர்கள் யாவரும் வந்திருந்து மாநாட்டைச் சிறப்பிக்க
வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
**ஐ. குமாரசாமி பிள்ளை.**

# தமிழ்வளம் போற்றுக!

ஆசிரியர், அ. குழந்தைவேலன், கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
தஞ்சை.

(முற்றொடர்ச்சி பக்கம்-216-மலர்-11)

பழந்தமிழர் வாழ்வியல் யாதென விளக்க முற்படுவார் பலரும் ஐந்திணைப் பாகுபாட்டை வலியுறுத்தி, 'தலைமக்கள் முறையே களவு மணங்கொண்டு, உடன் போக்குற்றுக் கற்பியல் பூண்டு வாழ்க்கை நடாத்துங்கால், தலைவர் பரத்தையர் வயப்பட்டுத் தலைவியர் தம் ஊடலுக்காளாகித் தணிவுற்றுப் பின்னர் பலவேதுவானும் பிரிவுற்றுத் தலைவியர் இரங்கலுக்கு ஆளாக வாழ்க்கை நடத்தினர் என வரைந்து அதற்குச் சான்றாக அவ்வத்திணை துறையமையக் கிடக்கும் சங்கச் செய்யுட்களை எடுத்துக் காட்டி நிறுவுவது பெருவழக்காகியுள்ளது. ஒருவனும் ஒருத்தியும் கூடுவதும், ஓடுவதும், மனையறந் தேடுவதும், கிழவன் பரத்தையரை நாடுவதும், கிழத்தி ஊடுவதும், கணவன் பிரிவு நேடுவதும், மனைவி வாடுவதும் ஒவ்வொருவர் தம் வாழ்க்கையிலும் நிகழ்ந்திருக்கக் கூடியனவா? அல்லது இந்நெறி முறைகள் ஒருகாலத்தனவா? மக்கள் தம் வாழ்வியல் முதிர்ச்சியினைச் சுட்டும் பாகுபாட்டினை ஒருகாலத்தவர் மேலோ, ஒவ்வொருவர் வாழ்விலோ தொடர்புபடுத்தல் பொருந்துமா?

மக்கள் விலங்கியற் பருவங்கடந்து வாழத்தொடங்கிய முதலிடம் இடி, மழை, வெயில், புயல் முதலிய இயற்கை நிகழ்வு களினின்றும், கொடிய விலங்குகளினின்றும் தப்பிவாழ வுதவிய குகை, சாரல் பொருந்திய குறிஞ்சிப் பகுதியேயாகும். காய், கனி, கிழங்கு, வித்து முதலியவற்றை உண்டு வாழ்ந்த குறிஞ்சிமக்கள் அவைபோதாத நிலையில் புலால் வேண்டியும், தற்காப்பின் பொருட்டும் வேட்டைத்திறம் பெற்றனர். பலவடிவாய்ச் சிதறிக்கிடந்த கற்றுண்டுகளே அவர்களது முதற்கருவி. அவையே பிற்பருவத்து பற்பல கருவிகள் ஆக்கிக்கொள்ள அறிவூட்டியன. காய்ந்த மூங்கில்கள் உராய்ந்து பற்றிக்கொள்வது கண்டு தீ யெழுப்புணர்வு உற்றனர். கொடிகளாற் சிக்குண்டு வளைந்த மூங்கில்களின் உதறலும், அவற்றினின்றுந் தெறித்த முட்களின் சிதறலுமே வில்லுணர்வு தந்தன. அவர்கள் வேட்டுவ நிலையால் இடம் பெயர்ந்து வாழ்வாராயினர். அப்பருவத்து ஒத்த அன்பு கிளர்ந்து எழப்பட்ட மகனும் மகளும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றிக் களவொழுக்கத்திற் கூடி வாழத் தலைப்பட்டனர். (அதற்கறிகுறியாக காதலன் வீரத்தாற் கொணர்ந்த புலிப்பல்லைக் காதலியின் கழுத்திலணிவது வழக்கு) இதனையே தொல்லோர் குறிஞ்சித்திணை யெனக் குறித்தனர்.

நாளடைவில் மக்கட்டொகை பெருகப் பெருக குறிஞ்சியினின் றும் காடுகளில் பரவத்தொடங்கினர். அவண் நிலேத்து வாழத்தலைப் பட்டு, மனேவிலங்குகளை வளர்த்துப் பயன்பெற அறிந்தனர். அவ் விலங்கு போற்றலின் திறனுக்கேற்ப உரிமைபாராட்டி செல்வக் குடும்பிகளாய் வாழ்க்கை நடாத்த முற்பட்டனர். இப்பருவத்து மக்கள் பலர் முன் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் மணங்கொண்டு கற்பியல் வாழ்க்கை தொடங்கினர். இதனையே மூதறிஞர் முல்லைத்திணையென முறைப்படுத்தினர். முல்லை என்ற சொல்லும் கற்பெனும் பொருளதே யாகும். தம்மந்தைகட்கு கள்வரானும் விலங்குகளானும் நேரிடக் கூடிய கேட்டினைத் தவிர்க்க பலகுடும்பங்கள் ஒற்றுமையுடன் தங்க ளுள் சிறந்தாைெருவனைத் தலைவனுகக் கொண்டனர். இம்முறையே அரசன்தோற்ற முதலாயிற்று. 'கோன்' என்ற சொல் அரசரையும் இடையரையும் குறிப்பது கருதத்தக்கது. அன்று மந்தையைமேய்த்த கோலின் குறியே பின்னைய செங்கோல்.

இங்ஙனம் முல்லையிற் சிறந்தமக்கள் நெய்தலிற் பரவினர். அவர் நெடுங்கடலுட் சென்றுவரும் ஆற்றல் பெற்றனர். கடல்படுபொருள் களைப் பிறரிடங் கொடுத்துப் பண்டமாற்று செய்து வணிகமுறை தோற்றுவித்தசிறப்பு நெய்தல் நாகரிகப் பருவத்தினர்க்கே உரித்து. முல்லைவெளி, நெய்தல் வெளியினின்றும் பரவிய மக்கள் இரண்டிற் கும் இடைப்பட்டுக்கிடந்த ஆற்றுவெளிகளில் தங்கி வேளாண்மை யறிந்து நாகரிகத்திற் சிறந்தனர். அவர்கட்குத் தேவையான பொருள் கள் எளிதாகவும் மிகுதியாகவும் கிடைத்தமையால் ஓய்வும் ஓய்யார மும் மிக்க வாழ்க்கை நடாத்த முற்பட்டனர். அவருள் சிலர் செயலே பரத்தையர் ஒழுக்கமும் வகுக்கநின்றது. இவ்வாறு முதிர்ந்ததே மக்கள் நாகரிகம். அவ்வுண்மையினை ஓராது தமிழர் வாழ்வியலைக் கற் பித்தல் பொருந்துமாறில்லை காண்க.

முன்னாள் முதலமைச்சர் [1]பேரறிஞர் சி. இராசகோபாலாச்சாரி யார் அவர்கள் [2]திரு. வி. க. அவர்கள் உள்ளிட்ட ஒருசிலர் இன்றைய இந்தியமக்கள் யாவரும் கலப்பினம் எனவும் ஆரியர் திராவிடர் எனப் பிரித்துப் பேசுவது தவறு எனவும் வலியுறுத்தி வருகின்றனர். நாட் டின் நடைமுறையில் அம்மக்களின் அமைவும் வாழ்வும் வெவ்வேறுக வன்றே விளங்குகின்றன. இன்றைய இந்திய மண்ணில் கலப்பில்லாத ஆரியக்குருதி பாயும் மனிதனே இல்லை என்பது தேற்றம். இன்று ஆரியரெனப் பேசப்படுவோர் அனைவரும் தாங்கள் பரவிய இடத்து, காலத்து, வாழ்ந்த மக்களோடும், தங்கட்குப்பின்னர் வந்தேறிய பிற இனங்களோடுங் கலந்து தோன்றிய பலதிறப்பட்ட கலவைக் கூட் டமே, அவர்கள் தழுவிய கலைமுறை, அமைந்த பண்பாடுகட்கேற்ப ஆரியரென்ப தல்லது முற்றிலுங் கலப்பற்ற தூய ஆரியராவரோ?

ஆரியர்கள் கி. மு. 2000 முதல் கி. மு. 1400 வரை வந்தேறியதாக வரலாறு கூறுகின்றது. அவர்கள் வடமேற்குக் கணவாய் வழியாக வந்த காலத்து இவண் இருந்த மக்கள் இணங்கியும், எதிர்த்துத்

1. உலகறிவே பக்கம் 49
2. இளமை விருந்து பக்கம் 146.

தோல்வியுற்றும் இடங்கொடுத்தனர். குளிர்நாட்டில் நாடோடியாய் வருந்தி வாழ்க்கைநடத்திய கூட்டம், வளநாட்டில் எளிதாய் வாழ்க்கை நடத்திய கூட்டத்தினும், ஆற்றல் மிகப் பெற்றிருந்திருத்தல் அமை வுடைத்தன்றோ! வலுவில் விஞ்சி, வாழ்வில் செப்பமுறுதிருந்த மக்கள் திருந்திய வாழ்வினரோடு கலந்தனர். தங்கள் தனிமையையும் தூய் மையையும் விட்டுக்கொடுக்க மனமில்லாத பழங்குடி மக்களில் பலர் இறுதிவரை போரிட்டு அழிந்தனர். பலர் பின்னிட்டுச் சிதறித் தங் கினர். ஆரியரைப் போன்று பின்னரும் வந்தேறிய, துரானிய, மங் கோலிய இனத்தவர்களும், முன்னர் வந்து கலந்தும் தனித்தும் வாழ்ந்த ஆரியரோடும் பழங்குடியினரோடும் கலந்தனர். அவ்வாறு வடநாட் டில் கால் கொண்ட கலவைக்கூட்டம் கங்கையும் சிந்துவும் பாய்ந்து செழுமை செய்த வளநாட்டை விடுத்து, இரசபுதனப் பாலையையும் விந்தியமலைப்பாங்கரையும் கடந்து தெக்கண மேட்டுவெளியை விரும் பிற்றிலது. நாளடைவில் மக்கள் நெருக்கம் மிக மிக, சிறிது சிறிதாக தெற்கே பரவிற்றாயினும், விரைவும், வீறும், தனித்த பண்பாடும் இழந்த இனத்தால் தெற்கண் வாழ்ந்த பழங்குடியினரை விஞ்ச முடி யாது கெஞ்சிய வாழ்வே கொண்டது.

மங்கோலிய-திராவிடக் கலப்பே இன்றைய வங்காளிய மரபா யிற்று; திராவிட-ஆரியக் கலப்பே மராட்டிய மரபாயிற்று; தனியினக் கலவையும், கலவையினக் கலவையுமே இன்றைய வடநாட்டினமாகும். ஆனால் விந்தியத்திற்குத் தெற்கே வேங்கடம் வரையும் ஓரளவேனும் கலைமுறையிலும் மொழித்துறையிலும் கலப்பேறபட்டது. ஆயினும் அவண் முன்னினப் பண்பாடே மிகுந்து விளங்குவதாயுளது. வேங் கடத்திற்குந் தேற்கே வாழ்ந்த மக்கள் தங்கள் தனிமையையும், தூய் மையையும், உரிமையையும் அன்றும் விட்டுக் கொடுத்தார்களில்லை; இன்றும் அப்படியே. அவ்வாறாயின் இத்தென்னாட்டுப் பார்ப்பனர் யாவரேயெனின் வடக்கிருந்தும் பரவிய கலவையாரியரும், திராவிட ரும் தம்முள் கலந்து தோற்றிய இனமேயாகும். அவர்களை அக்கால மக்கள் எல்லா நிலையிலும் ஒதுக்கியே வைத்து இருந்திருக்கின்றனர். அவர்தம் கலைமுறை, பண்பாடு முதலியன, இன்றும் வேறாகவே விளங்குகின்றன. தங்கள் சூழ்ச்சித் திறனால் சமயத் துறையுள் புகுந்து முழுதும் வெற்றி கொண்டனர் என்றே சொல்லலாம். கலைத் துறையில் தாங்கள் போற்றிய ஆரியத்தைப் புகவிடுத்துப் போட்டி விளைத்துள்ளனர். அதனாற் சிற்சில கலைகள் மங்கியுமுள. மொழித் துறையில் எழுத்தையுங் கருத்தையும் புகுத்தி தமிழின் தனிமையைச் சிதைக்க முயன்று வரினும், அதனை உதறித் தள்ளி தனது தூய்மை யைப் போற்றிக் கொள்ளக்கூடியதாகவே தமிழ் இருந்து வருகின்றது.

தீண்டாதார் எனக்கருதப்படும் திராவிடமக்களை, ஆரியர் தம்கலை, மொழி, பண்பாடு இனம் எதுவும் தீண்டிற்றிலது. தொழில்பற்றியும், இடம்பற்றியும் எழுந்த பிரிவுணர்ச்சியைப் பற்றிக்கொண்டு போலி யாக, பிறப்பினால் சிறப்படைய விரும்பி, ஆரியத்தைத் தழுவி, மேல் வகுப்பினராகப் பற்பலர் மாறினரேனும், பிறவினக் கலப்பிற்கு இடங் கொடாது, இன்றளவும் தங்கள் தூய்மையைப் போற்றியே வருகின் றனர். காஞ்சிப்பார்ப்பனர் காசியிலும் மணவுறவு கொள்ளத் தயங்

கார். ஆனால் காஞ்சி வேளாளர் தஞ்சைவேளாளரோடும் உறவு கொள்ள மயங்குவர் என்றால் தமிழர்தம் இனத்தூய்மை எந்த அளவில் போற்றிவரப்படுகின்ற தென்பது விளங்குமன்றோ! தென்னாட்டுப் பார்ப்பனர் இந்நாட்டுமக்களை இன்றும் வேற்றினமாகவே கருதி உண்ணல், உடுத்தல், உறைதல், தொழுதல் முதலிய துறைகளில் நடித்து வருகின்றனர். தமிழைப் பேசுதற்கு மட்டுங் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு, வடமொழியையே அதனை அறியாத நிலையிலும் பெரிதும் போற்றி வருகின்றனர். இவ்வாறு பல துறைகளிலும் முரண்பட்டுள்ள ஆரியரும், தனிமை கெடாதுள்ள திராவிடரும், கலந்து விட்டனர் என்பது தமிழ்நாட்டளவிற்குப் பொருந்துமாறுண்டோ?

உலக வளர்ச்சியில் மக்கள் விலங்கியற் பருவத்தைக் கடந்து கற்கால நாகரிகம் பெற்று, அதனின்றும் சிறந்து உலோககால நாகரிகம் பெற்று, அதனின்றும் சிறந்து, இயந்திரகால நாகரிகப்பருவத்தினராகவுள்ளனர். இயற்கையைக் கட்டுப்படுத்தி வருங்காலத்தையறுதியிட்டு முன்னேறிச் செல்லும்படியான விஞ்ஞானகால நாகரிகமும் முதிர்ந்து கொண்டுவருகிறது. இவற்றை யெல்லாம் கண்கூடாகக் கண்டுகொண்டிருந்தும், நாமும் அத்துறை போகாது ஒதுங்கியிருப்பது நன்றாகுமா? இவ்வாறிருப்போமாயின் பழைய கற்காலத்தினும் கீழானவிலங்கியல் காலத்தினராய் நடத்தப்பெறுவோமென்பதைத் தமிழர்கள் உணரும் நாள் என்றோ? வானொலி, நிழற்காட்சி, மின்னொளி மின்வலி, முதலிய துறைபோகி ஆராய இதுபொழுது வசதியில்லையாயினும் அவைபற்றி யாவரும் அறிதற்கேற்ற முறையில் நூல்கள் வெளிவரச் செய்து விஞ்ஞானக் கலையை நமக்கும் உரியதாக்கிக் கொள்ளவேண்டாவோ?

நமது வாழ்க்கை, மொழி, கலை, பொருள், அரசு ஆகிய பலதுறைகளும் பிற்படுத்தப் பட்டுள்ளன. இவற்றை உணர்ந்து அவற்றை நாமே யாக்கிக் கொள்ள வேண்டுமே யல்லாது பிறரால் ஆக்கப்பெறேம். இன்று நமக்கு முதற்கண் வேண்டுவன வரலாறும், விஞ்ஞானமுமே. ஆராய்ச்சித் துறைபோகிய அறிஞர்கள் அவற்றை நமக்கு உரிமை செய்வார்களாக!

# இருபாவிகள்

K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

வாழ்வின் நிலைக்களனும் இந்நிலவுலகம் அறவழி நின்று ஆருயிர்க்கினிய அருளாளர்க்கு அடங்கி அவர்தம் பெருமையான் பீடுபெறும். அதனானே நிலமிசை நீடுவாழ விரும்புவோர் உலகமென்பது ஏந்திய கொள்கை யாரென்றறிந்து அன்னாரது ஆற்றல் நிறைந்த மொழியை மறைமொழியெனக் கொண்டு, அஃதே உயர்வாழ்விற்கு சிறப்பும் செல்வமும் தரும் அறமெனப் போற்றுவர். மற்றும் அதனைக் கணமேனும் மறப்பின் ஆக்கமிழப்பதன்றி, கேடுமுறுவ ரென்பதூஉம் கருதுவர். கூர்ந்து சிந்திக்குங்கால், மக்கள் பொதுவாக அறநெறியில் செல்லும் ஆற்றலிலராய் வழீஇப், பிறபல நெறி புகுந்து மனநல மற்று அறியாமை இருளில் சுழன்றலைந்து இழிவாக்கும் தீவினையலைகளான் மொத்துண்டு கிடப்பதனான், உலக வாழ்வு துன்பந்தரும் வினைகள் சார்தற் கிடனாகின்றது. இதனானே ஒத்த பிறப்பினையுடைய மக்களுள் வறிஞர் பலராகவும் செல்வர் சிலராகவும் இவ்வுலகினகண் காணப்படுகின்றனர். எனவே உடம்பு பெற்றாரெல்லாம் உயிரைப் பெற்றவரெனினும் அவ்வுயிர் உயர்நிலையெய்தி மெய்யின்பத்தைப் பெறும்படி மனநலமும் அறிவும் காரணமாக உயர்வுபெற்றவரே, தன்னுயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவர். மற்றும் உயிர்பெற்ற பயனையு முற்றவருமாவர்.

வாழ்க்கை ஓய்வு ஒழிதலில்லாத வினைக்கூடமாக யிருப்பினும் அதன் குறிக்கோளின் உட்பொருளை அறிந்து அதனை நடத்திச் செல்லின் இடர்ப்பாடு யாதுமின்றாம். மத்திய தரைக்கடலில் (Mediterranian sea) கலனை ஓட்டுபவர், 'சில்லா' (Scylla) எனும் நீர்க்கீழ் மலைக்கும், 'காரிபொடிசு' (Charibodis) எனும் சுழலுக்குமிடையே உற்ற வழியறிந்து அக்கலனைச் செலுத்த முயலவேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அஃது ஓரோவழி மலையில் தாக்குண்டு உடையும்; அன்றேல் சுழலின் வாய் அகப்பட்டு அமிழ்ந்துவிடும். அவ்வாறே பிறப்புமுதல் இறப்புவரையி லுட்பட்ட இடைக்காலத்தில், வாழ்க்கைக் கலனை ஓட்டுபவர் யாவரும் அழுக்காறு என்ற 'சில்லா'வுக்கும் 'இன்மை' யென்ற 'காரிபொடிசு'க்குமிடையே வழியறிந்து அதனைச் செலுத்த வேண்டும்.

அல்வழி யொழித்து நல்வழிச் சேறல் அறிவின்பயனாதலால் அவ்வறிவு, கருவியாகத் தோன்று மின்பத்துள் தலையாயது வீடுபேறு: கடையாயது உலக இன்பம். மேதக்க மெய்யின்பத்தை அடையவொட்டாது தடுக்கும் அழுக்காறாகிய பண்பினை பாவியென பண்பியாக்கியும், கடையாய உலகஇன்பத்தையும் அடையவொட்டாது தடுக்கும் நல்குரவினை இன்மையென யொருபாவி யென்றும், உலக வழக்கு நோக்கிச் செந்நாப்போதார்,

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.
இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.

எனக்கூறி, நிலையறு வாழ்க்கையில் இவை கொடுந் துன்பவுருப் பூண்டு தொடங்கியுருத்து வருத்துதலான், அப்பாவிகளைப் புறக்கணித் தொதுக்கும் பெருமித வொழுக்கம் மேற்கொள்வார், தாம் அயர்வின்றி யும்,வாழ்ந்து மெய்வாழ் வெய்துவரென செவியறிவுறுத்து வாரா யினர்.

அழுக்காறென்ற குணத்தை இவண் குணியாகக் கூறினது அதன் இழுக்கான புல்லிய தன்மையும், செயலையும் நோக்கி என்க. அழுக் காறுடைமை மடமையாகும். உலகம் உய்தற்பொருட்டு தமிழ் மறை தந்த தண்ணளியாளர் 'அழுக்கறுப்பான் அறனுக்கம் வேண்டா தானு' தலால், தன்னை யடுத்தானை இம்மையிற் செல்வத்தைக் கெடுத்து மறுமையில் நரகிற் செலுத்தும் கொடுமைபற்றி அழுக்காற் றைப் பாவியென்ருர். மற்றும் ஒருவர் எத்துணைக் கொடியராயினும் தன்னை அடுத்தாரைக் கெடுக்கச் சிறிதுஅஞ்சுவர். அன்றி, ஒரோவழி கெடுப்பின், அடுத்தார்க்கு இம்மையில் மட்டும் துன்பம்சாரும். ஆனல் அழுக்காறு, இருமையினும் சிறுமையே தந்து துயர் பல அடையச் செய்யும். அழுக்காறு தன்னையுடையானைத் திருவையிழக்கச்செய்தும், மிடியால் முடிவில் மடியச்செய்தும் தீயுழியில் அழுந்தச் செய்வதனுன் அஃது ஒப்பற்றபாவி யாயிற் றென்பது ஈண்டுணரற்பாலது.

பெறுகின்ற பேறுகள் யாவற்றுள்ளும் அழுக்காறின்மையே ஒருவர்க்குற்ற விழுப்பேறென்பதையும், உயிர்கட்கு விழுமிய ஆக்கம் அழுக்காற்றின் நீக்கமே யென்பதையும் சுட்டிக் காட்டவே, வள்ளுவப் பெருந்தகை,

அழுக்கா றவா வெகுளி யின்னுச் சொன்னுன்கு
மிழுக்கா வியன்ற தறம்'

எனக்கூறலுற்ருர்.

உலகமக்கள் கடியவேண்டிய மனமாசு நான்கினுள், அழுக்காற்றை முன்வைத்து, பின் ஒருவருக்கு அழுக்கறுத்தலாவது அவாவின்மை யாதலான், அழுக்காறு அவாவென்னும் துன்பத்தில் அழுத்திவிடு மெனவும் கருதி அவாவை இரண்டாவதாக வைத்து, பின் அழுக்காற் றின் வரும் மனக்குற்றத்தையும் மொழிக் குற்றத்தையும் முறையே மூன்ருவதாகவும் நான்காவதாகவும் தொடர, முதற்பாவலர், வைத் தருளிய பான்மை ஈண்டு உணரற்பாலது.

அழுக்காறென்ற கொடிய பாவி தனக்குப் பிறவியின் பயனுகும் அறனுக்கம் விரும்பான். பிறனுக்கமும் வெஃகி கணப்பொழுதும் நில் லான். மற்றும் அறஞ்செய்யும் ஆற்றலுமில்லான், வீடு பேற்றிற்குச் சேயனுவன். யார் மாட்டும் சினந்து கடும்பற்றுள்ளத்தனாய் என்றும் வறுமையிலுழல்வான். நேர்மை தப்பி, சுற்றமும் உணவுமின்றிக் கெடு வான். உலகத்தோடொட்ட ஒழுகல் அறியாததால் அறிவீனனுகத் தூற்றப்படுவான். பிறன் பொருட்டுத் தானுரியவன் என்ற நடுவன் மையை நாணது நாடுவன். தீவினை யியற்றுவதில் தடிப்பேறி, பிழை

செய்யப்பின்வாங்கான். எய்தாப் பழியும்பெற நாணுன். அறம்வகுத்த ஒழுக்க நெறியில் நில்லாது சிறுமைபல செய்து உடை, செல்வம், ஒளி முதலியன இழந்து வறுமை யெய்துவான். அழுக்கறுப்பான் மன்னுயிர் பால் இரக்கவுணர்ச்சி யில்லாது இன்னுசெய்யும் வன்மையன். ஒரு பொழுதும் நன்குவாழ்வதறியாத முறுகிய உணர்விலாமூடன்; எனவே அழுக்காற்றின் தீப்பயனினின்றும் நீங்க விரும்புவோரும் இசையெனு மெச்சம் பெற வேட்கையுற்ருேரும் அழுக்காருமையே ஒழுக்கநெறி யெனக் கொள்ளக்கடவர். ஆகவே, ஆசிரியர் வள்ளுவனுர், அழுக் காறுடையானை,

> ‘அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
> யொழுக்க மிலான்க ணுயர்வு’

என்ற குறளில் ஒழுக்கமிலானுக்கு உவமையாக்கி அழுக்காறுடை யான் ஒழுக்கம் ஏதமுற்றும் பயனற்று மொழியுமாதலான், அவ் வொழுக்கம் செவ்விதாவதோடு ஒழுக்காறும் அழுக்காறிலாது செவ் விதாக வேண்டுமென்று,

> ‘ஒழுக்காருக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
> தழுக்கா றிலாத வியல்பு’

என்ற அருமைக் குறட்பாவில் உள்ளுறையாக வைத்து மக்கள் உய் யும் நெறியினைச் சாற்றியுள்ளார்.

விளியாது நிற்கும் பழியைத் தரும் அழுக்காறென்ற பாவிக்கு உடன் பிறந்தோன், வாழ்வைச் சிதைக்கும் வறுமைப் பாவியென்க. அழுக்காற்றினுல் விளையும் அவா வென்பது அல்காநல் குரவே. இரு மைக்கும் நன்மையாகாத ஒளவித் தழுக்காறுடையானது உள்ளம் அருளை நாடாததனுன், அன்னுன் ஆக்கப் பெருக்கத்தினின்றும் நீங்கி னவனே. அழுக்காற்றைச் செய்து செழித்தாராயினுரும் இல்லை. என் னெனின் உலகியல் பறிந்த சான்ருேர் அருளின்மை பொருளின்மை யோடொப்பிட்டுப் புகன்றிருக்கின்றனர். ‘பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை’, ‘இல்லாரை யெல்லாருமெள்ளுவர் செல்வரை, யெல்லாருஞ் செய்வர் சிறப்பு’ என அறிவுநூல் வழியாக உணரக் கிடக்கினும் ‘பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும் பொருள்’ இல்லாதவர்ஒரு கால் பொருளுடையராய்ப் பொலிவர். அருளற்ருர் அன்னரல்லர். அவர் பின்னெருகாலத்தும் அருளுடையராதலரிது. ‘பொருள் துன் னுங்காலைத்துன்னுதனவில்லையே’என்ருராயினும், அப்பொருளையீட்டு தலினும், பேணுதலினும், அழித்தலினும், இழத்தலினும் துன்பந் தரு தலால் நிலையாப் பொருளால் அடையுமின்பம் போலியின்ப மென்க. ‘அறனும்அருளுடையான்கண்ணதேயாகும்’ என்பதூஉம்,‘அறத்தான் வருவதேஇன்பம்’ என்பதூஉம், ‘அறஞ்செய்யும் உயிரனுபவமுற்ருல் அருளனுபவமுறும்’என்பதூஉம்பனுவலான்ஆராய்ந்தறிந்துகொண்ட தொல்லோர் துணிபு. அருள், நிலையுடையதாதல் பற்றி அதனன் நேருமின்பம் நீடு நிற்கும். அருளுடையோர் அவ்வருளிற் படியுந் தோறும் இன்பமேதுய்ப்பர். பொருளும் அவ்வருளுக்கேயுரியதென்பது ‘ஈதற்கு செய்க பொருளை’ என்பதனுனும், ‘பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு, பிறர்க்குதவி யாக்குபவர் பேரும்’ என்பத னுனும் நன்கு புலனுகின்றது. பொருளுடையார் அருளிலராயின்

அவர் அப்பொருளால் அடையுமின்பம் நிலைபேறுடையதன்றென்க. எனவே அருளுடையார் எல்லாம் உடையார் என்பது அறிஞராற் கொள்ளத் தக்கதென ஓர்க. ஆகவே, அழுக்காற்றில் உள்ளத்தைச் செலவிடுவோன் அறனேம்பான்; அருளுமிலான்; அதனுனே ஆக்கந் தவிர்ந்து ஏக்கமடைவான். அழுக்காறேதுவாகச் செல்வமுளதாயினும், அஃது பலதுயர்களுக்கும் பழிக்கும் நிலைக்களனுய் நின்று அவனுக்குக் கேட்டையுந்தந்து அன்னானைத் துன்பத்திற்குக்கொள்கலமாகிய வறுமையில் புகுத்திவிடும்.

வறுமையெனச் சொல்லப் படுவதொருபாவி ஒருவனது வாழ்வை அடியோடுதுன்புறுத்தி இருமை இன்பங்களைக்கெடுத்துவிடும். ஈயாமையான் மறுமை நலனும், துவ்வாமையான் இம்மை நலனும் இன்றி வறுமையாளன் வாடுவான். வறியார் ஒரு நலமுமின்றி இருமை அறியாதும் பிறப்பிலுள்ள சிறப்புரிமைகளற்று, இழி நிலையெய்தி, கண்ணுறக்கமுமின்றிக் கடுந்துயரடைவர். வறுமை, சிறுமைபல செய்து சீரழிக்கும் நிலை,

‘விருந்து கண்டொளிக்கும் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புணர் உடம் பிற்ருேன்றி என்
அறிவுகெட நின்ற நல்கூர்மையே’

என்று தெள்ளூற்ற தீந்தமிழ்ப்புலவராய பெருங்குன்றூர்கிழார் கூறுவதனுன் புலனும். மற்றும் இஃது உயர்ந்த மக்களைத் தாழ் நிலையில் புகுத்திவிடும். இஃதோடமையாது அவர்தம் பேராற்றலையும், கல்வி நிலையினையும் கெடுத்துவிடும். அவர்தம் நற்செயலும் சொற்பொருளும் சோர்வுபடும்; இறுதியடும். ‘புல் ஈரப்போழ்தின் உழவேபோல் மீதாடிச், சொல்லாவாம் நல்கூர்ந்தார்சொல்’ என்பது பழுதிலா நாலடியின் ஈற்றடி.

வறுமைப் பாவி இழைக்கும் துயருக்கு இணை வறுமைத்துயரேயன்றிப் பிறிதில்லை, நெருப்பினுள்ளே கிடந்துறங்கினும் உறங்கலாகும்: ஆனல் நிரப்பிடும் பையுள் ஒரு கணமேனும் உறங்குதல் இயலாது என்ற கருத்துகொண்ட

‘நெருப்பினுட் டுஞ்சலுமாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது’

என்ற குறட்பாவின் உட்கிடையைக் கூர்ந்து நோக்கின் மிடி யென்ற பாவி இழைக்கும் துன்பத்தின் எல்லை ஒருவாறு துணியப்படும்.

இத்துணையும் கூறியவாற்றல், அழுக்காறென ஒருபாவி ‘திருச் செற்றுத் தீயுழியுய்த்து விடும்’ என்றும், இன்மையென ஒரு பாவி, ‘மறுமையு மிம்மையு மின்றிவரு’ மென்றும், முன்னையது மனக்கோட்டத்தால் எழுந்து முதற்கண் அகத்திலிருந்து இழிவாய்த் தோன்றி, குடிபொன்றி, பல்குற்றமும் தருமென்பதூஉம், பின்னையது வினைக்கேட்டால் விளைந்து அவ்வினை வயத்தால் புறமே நின்று மானம் கெடுத்து மாண்பினையும் சிதைக்கு மென்பதூஉம் பெறப்படுதலான், அறக்கொடிய நிரயத் துன்பத்திற்கும் அல்லலுக்கும் இடனுய்முடியும் இவ்விருபாவிகளது உறவைக்களைந் தொழுகுதலேநல்லோர்க்குஇன்றியமையாக்கடப்பாடென்பதூஉம், அப்பாவிகளது கூட்டுறவுஎட்டுணையும் வேண்டப்படா தென்பதூஉம் நன்கு தெளியப்படும்.

## புறப்பொருள் வெண்பா மாலை.

வித்துவான், பழநி முதலியார் அவர்கள் விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

புறப்பொருள் வெண்பா மாலை புறப்பொருளைப் பற்றிய இலக்கணங்களை விரித்துக்கூறுவது. இந்நூல் வெண்பாவால் இயன்றிருத்தலின் புறப்பொருள் வெண்பாமாலை எனப்பெயர் பெறுவதாயிற்று. இந்நூலின்கண் காணப்படும் வெண்பாக்கள் திட்ப நுட்பஞ்செறிந்தனவாய் இன்னோசை மருவினவாய்ப் படிப்போரை மகிழ்விக்கும் பான்மையன. இந்நூலில் போரைப் பற்றிய செய்திகளே யாங்கணுங் காணப்படினும், ஆங்காங்கு வேறுபல செய்திகளையும் அறியலாகும். இந்நூலாசிரியர் சேரர் பரம்பரையினராதலின் போர்வகைகளை நன்கு விளக்கிக் கூறியுள்ளார். இந்நூலால் அறியப்படுவன சிலவற்றை ஆராய்வோம்.

இந்நூலாசிரியர் ஒருவமையை ஓரிடத்துக்கூறின் அதனையே பின்னரும் மறவாமற் கூறுவர். உதாரணமாக வெட்சியார் நிரை கவரப் புறப்பட்ட காலை அவர் வில்லோடு நின்ற தோற்றத்தைக் கண்டு அவரைக் கூற்றினத்தன்னார் எனக்குறிப்பிட்டார். இதனைக் " கூற்றினத் தன்னார் கொடுவில் இடனேந்தி, பாற்றினம் பின்படர முன்படர்ந்து " என வரும் அடிகளால் அறியலாம். வெட்சியார் கவர்ந்து கொண்ட நிரையினைக் கரந்தையார் மீட்க முற்பட்டனர். அந்நிலையினைக் குறித்து உவமை கூறவந்த ஆசிரியர், கரந்தையார், வெட்சியாரிடமிருந்து அவர்கொண்ட பசுக்களை மீட்பது கூற்றுவன் உண்ட உயிரை மீட்டும் விடுதலை கொண்ட தன்மைத்தாகும் எனக்கூறியுள்ளார். முன்னர்க் கூற்றினத்தன்னார் என்பதற்கேற்ப, அவர் கொண்ட பசுவை மீட்டல் கூற்றுவன் உண்ட உயிரை மீட்ட தன்மை போலும் என்றார். உழிஞைப் படலத்தில் உழிஞையார் கிடுகு படையேந்தி விரைந்து சென்றதற்கு, மலையிடத்து விரைந்து சென்று புகும் புட்களை உவமையாகக் கூறினார். அவர்கள் அரணினுள்ளே பாய்ந்ததற்கு மலையினிடத்து உச்சியிலிருந்த பறவைகள் பூமியிலே இரையைக் கண்டு விரைந்து பாய்வதை உவமையாகக் கூறியுள்ளார்.

இவ்வெண்பாக்களில் சில எண்ணலங்காரம்பட அமைந்துள்ளன. ஓம்படை என்னுந் துறையில் " ஒன்றி லிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால், வென்று களங்கொண்ட வேல் வேந்தே-சென்றுலாம்; ஆழ்கடல் சூழ்வையகத்துள் ஐந்துவென்றாறகற்றி, ஏழ்கடிந் தின்புற்றிரு " என வந்துள்ளதனாலும், அரசவாகை என்னுந் துறையில் " ஐந்தொழில், நான்மறை, முத்தீ, யிருபிறப்பு, வெந்திறற் றண்ணளி யெம்வேந்து " எனவந்துள்ளதனாலும் அறியலாம்.

அவையின்கண் உள்ளார் சான்றோராக இருத்தல் வேண்டும் என்பதை " எட்டின் வழிபடர்தல் வல்லதவை " என்பதனாலும், அரசனுடைய காவலைச் சிறப்பித்துச் சொல்லுந்துறையில் " ஒருநாண் மடி

யின் உலகின்மே னில்லா இருநால் வகையா ரியல்பு" என்பதனுலும் தெரிவிக்கின்ருர். "குடிப்பிறப்புக் கல்வி குணம் வாய்மை தூய்மை, நடுச்சொல்லு நல்லணி யாக்கம் கெடுக்கும்—அழுக்கா றவாவின்மை அவ்விரண்டோடெட்டும் இழுக்கா அவையின்கண் எட்டு" இந்த எட்டனையே புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர் குறித்துள்ளார்.

முனிவர்களுடைய எண்வகை ஒழுக்கத்தை "நீர் பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடைஇச்

சோர் சடை தாழச் சுடரோம்பி—ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்"

என்பதனுலும், வணிகர்களுடைய அறுவகைத் தொழிலை,

"உழுது பயன்கொண் டொலிநிரை யோம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து—முழுதுணர
ஓதி யழல் வழிபட் டோம்பாத ஈகையான்"

என்பதனுலும் விளங்கக் கூறியுள்ளார்.

பண்டைக் காலத்தில் வாழ்ந்தோர் மிகச் சிறந்த வீரர்களாக விளங்கினர். அவ்வாறு மிகச் சிறந்த வீரர்களாக விளங்கியதற்குக் காரணங்கள் இரண்டிருந்தன. அரசன் வீரர்கள் போர்க்குச் செல்வதற்கு முன்பே ஊரும் நாடும் அணியுங் கொடுத்துச் சிறப்புச் செய்வான். வென்று வந்தால் அவன் வாழ்க்கையைச் செம்மையுற நடத்துவதற்கேதுவாக மருத நிலங்கள் பலவற்றைக் கொடுப்பான். போரில் மாண்டானுயின் அவன் புதல்வனுக்குக் கொடுப்பான். இதனை "வெல்பொறியும் நாடும் விழுப்பொருளுந் தண்ணடையும்,... கொல் களிறும் மாவுங் கொடுத்தளித்தான்" என்பதனுலும், "பிணங்க மருள் பிள்ளை பெயர்ப்பப் பெயராது — சிலையளித்த தோளான் சின விடலைக் கன்றே தலையளித்தான் தண்ணடையுந் தந்து" என்பதனுலும் "புண்ணெடு வந்தான் புதல்வற்குப் பூங்கழலோய் தண்ணடை நல்கல் தகும்" என வருவதனுலும் அறியலாம். போரில் இறந்தவர் தவருது வீரசுவர்க்கம் அடைவர் என்ற நம்பிக்கையும் இருந்து வந்தது. இதனை, "எயிறனை அழித்தல்" என்னுந் துறையில் "அகத்தனவார்கழல்" எனத் தொடங்கும் பாட்டினுள்" தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட, வாட்குரிசில் வானுலகினன்" என்பதனுலும், நெடுமொழி வஞ்சியில் "இன்னரென வேண்டா" எனத் தொடங்கும் பாட்டினுள்" பருந்தார் படையமருள் பல்லார் புகழ விருந்தாயடைகுறுவர் விண்" என்பதனுலும் அறியலாம்.

இவ் வாசிரியர் ஒருவரைப் புகழவேண்டுமாயின் அவருடைய பகைவரைப் புகழ்ந்து அத்தகையோரையும் வென்றவர் இவர் எனக் கூறுவர். அவ்வாறு கூறுதலை இரண்டு எடுத்துக் காட்டுகளால் விளக்குவாம். உழிஞையார் நொச்சியாருடைய குறுங்காட்டைக் கடந்து சென்று, பகைவருடைய மார்பிலே கொடிய அம்பைச் சிந்தும் நொச்சியாருடைய மார்பிலே தங்கும்படி வாள்களை வீசினுர்கள் என்பதனுலும், உழிஞையார் மதிலை முற்றுகையிட்டதைக் கூறுமிடத்து பகைவர் மார்பிலே மூழ்குமாறு செலுத்தும் வாட்படையினையுடைய நொச்சியாருடைய அரணின் புறத்தே தங்கினுர் என்பதனுலும் விளங்கும்.

அக்காலத்திய மக்கள் சில நிகழ்ச்சிகளைத் தீ நிமித்தமாகவும், சிலவற்றை நன்னிமித்தமாகவுங் கருதினர். வெட்சியார் பூச்சூடி நிரை கவரப் புறப்படவே கரந்தையாரது காட்டிடத்துள்ள பசுக்கள் நின்ற இடத்தின் கண்ணே காரி (கரிக்குருவி) என்னும் பறவையானது அழாநிற்கும் என வருவதூஉம், வஞ்சியரசன் தன் வாளைப் புறவீடு விட பகைவர் உண்ணாட்டிடத்து உச்சிப்பொழுதும் கோட்டான் பாடா நிற்கும் என வருவதூஉம் தீ நிமித்தமாகும். வெட்சியார் நிறை கவரச் சென்றபோது, தங்கணவர் விரைவில் திரும்பி வாராமை கண்டு கவலையுற்றுக் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டிருந்த மகளிர்களுக்கு இடக்கண் துடித்தன. பின்னர் வெட்சியார் நிரையினை ஓட்டிக்கொண்டு அவர்கள் மகிழுமாறு வந்து சேர்ந்தனர் என வந்துள்ள பகுதி நன்னிமித்தமாகும்.

இந்நூல் அக்காலத்து விளங்கிய மகளிரின் கற்பு நிலையினை அங்கையுள் நெல்லிபோல் விளக்கமுற எடுத்துக் காட்டுகின்றது. ஆஞ்சிக் காஞ்சி என்னுந் துறையில் தலைவன் போரில் மிகப் பெரிய புண்ணுற்று இறக்க அதனைக் கண்டு ஒருதலைவி ஆற்றாளாய்த் தீ வளர்த்துத் தோழியர்கூட்டங்களையெல்லாம் விலகச்செய்து தீப்பாய்ந் திறக்கின்றனள் எனக் கூறப்பட்டிருப்பதாலும் ஒருத்தி தன் கணவனுடைய மார்பைப் பிளந்த வேலைப் பிடுங்கித் தானுங் குத்திக்கொண் டிறக்கின்றாள் என வந்துள்ளதனாலும், ஒருத்தி தன் கணவனுடைய தலையை மட்டுங் கண்டு ஆற்றாளாய்த் தலையைத் தழுவி உயிர்விட்டாள் என வந்துள்ளதனாலும் தெளிவுற விளங்குகிறது. பெண்களுடைய வீர நிலையும் வியக்கத்தகு முறையில் அமைந் துள்ளது. ஒருத்தி தன் குடிப்பிறப்பும் நாணமும் தன்னிடத்தை விட்டு நீங்க, தன் கணவனைக் காணும் பொருட்டுப் போர்க்களத்திற் குச் செல்கின்றாள். அங்கே தன்னுடைய கணவன் பகைவரது வாள் படுதலான் துணிக்கப் பட்டு வென்றிச் சிங்கத்தை ஒப்ப கிடப்பதைக் கண்டாள். கண்டதும் இத்தகைய வீரனைக் கணவனாகப் பெற்றேமே என்னும் உள்ள மகிழ்வினால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனள். அதனைக் கண்டதும் கொலைத் தொழிலிலேயே பழகிய கூற்றுவனும் நம்மிடத்துங்கூட இத்தகைய வீரமில்லை என நாணினான் என வருவத னாலும், ஒருத்தி போர் முரசங் கேட்டவுடனே பால் குடிக்குஞ் சிறு வன் கையிலே வேலைக் கொடுத்து முன்னோர்களுடைய வீரக் கல்லினை யுங் காட்டிப் போர்க்கனுப்பினாள் என்பதனானும், பின்னர் அவளே என் தந்தை போரிலே பட்டான்; கணவனும் தமையனும் போரிலே தான் பட்டனர்; என் மகனை ஏவினேன்; அவன் அம்பு தைத்து முள் ளம்பன்றிபோற் கிடக்கின்றான் எனப் பெருமிதம் தோன்ற கூறு கின்றதாலும் வெள்ளிடை மலையென விளங்குகின்றது.

வடமொழித் தொடரை இனியதமிழில் மொழி பெயர்த்துள்ளார். கிரவுஞ்சகிரி என்பதனைக் "குருகு பெயரிய குன்று" (103) எனவும், சம்புத் தீவு என்பதனை" நாவல் பெயரிய ஞாலம் (126) எனவுங் கூறியதனாலும் பிறமொழிச் சொற்களை அப்படியே எடுத்தாளுதல் மொழிவளர்ச்சிக்கு ஏற்றதாகாது என்னுங் கருத்துடையவர் என்பது புலனாகின்றது.

வெண்பாக்கள் மிகவும் இன்னேசையுடையவாய்ப் படிப் போரைக் களிப்புக் கடலுள் ஆழ்த்த வல்லன. உதாரணமாக சில பாக்களை நோக்குவாம்.

"அயிற்றுப் படைந்த அணியெழுவெல்லாம்
எயிற்றுப் படையா லிடந்து" அயில் துப்பு அடைந்த

எனவும், எயிற்றுப் படையால் எனவும் பிரிக்க.

"அஞ்சுவரு வாயில் அருமிளைக் குண்டகழி
மஞ்சிவரு ஞாயின் மதில்"

கீழடியை மஞ்சு இவரும் ஞாயில் என்று பிரித்துப் பொருள் காண்க.

வீரர்கள் இறந்த காலத்தும், அரசர்கள் இறந்தகாலத்தும் அவர்கள் பிரிவினைக் குறித்துத் தஞ்செயலறவு தோன்றப் பாடுவது கையறுநிலைச் செய்யுளாகும். அத்தகைய செய்யுட்கள் மனத்தை உருக்குந் தன்மையவாயமைந்துள்ளன. ஒரு வீரன் வாட்பூசலிலே பட்டான். அவனைக் கண்ட யாழ்ப்பாணன் ஒருவன் ஏனைய புலவர்களை நோக்கி நல்ல குடியிற் பிறந்த பொற்றாமரைப் பூவைச் சூடும் யாழாற் சிறந்த அறிவினையுடையீரே! இத்தகையோன் இறந்ததைக் கண்டும் உங்கள் கண்கள் கீழே உதிரப்பெறவில்லையே; அவை கல்லோ என வினவுவதாலும், அரசன் ஒருவன் இறந்துபட அவனுடைய சுற்றத்தார் வருந்துதலைக் கூறும்பொழுது, ஏ! நெஞ்சே! தாயை ஒத்தவன் இறந்து படுதலைக் கண்டும் உயிர் நீங்காது நின்றுயே? நீசேதனப் பொருளாய் நின்றுயோ? அன்றி அசேதனப் பொருளாய் நின்றுயோ என வினவியதுபோல வந்துள்ளதனுலும், இவ்வரசன் உலகத்தோர் தன் புகழை எடுத்துச் சொல்ல இசையை நிறுத்தி விண்ணுலகடைந்தான். இவ்வேல் வலிசிறந்தோனுடைய புகழைப் பாடிப் பாடி உலகத்துயிர்கள் சுழலா நிற்கும் என அமைந்துள்ள பகுதியாலும் விளங்குகின்றது.

போரில் பட்ட வீரர்களுக்குக் கல்லெடுப்பித்து, வழிபட்டு வந்தனர். 'கன்முறை பழிச்சல்' என்னுந் துறையிலே "கைவண் குரிசில்கல் கைதொழூஉச் செல்பாண, தெய்வமாய் நின்றுன் திசைக்கு" எனவருகின்றது. அக் கல்லிற்குக் கோயில் அமைத்தலும் உண்டு. "வாட்புகா வூட்டி வடி மணி நின்றியம்ப கோட்புலியன்ன குரிசில்கல்—ஆட்கடிந்து விற்கொண்ட வென்றி விறன் மறவரெல்லோரும் இற் கொண்டு புக்கா ரியைந்து." எனவருவதால் குரிசில் கல்லுக்கு மறவரெல்லோரும் கூடி கோயிலெடுத்தார் என்பது தெளிவாகின்றது.

இதன்கண் காணப்படும் அறவுரைகள் நெஞ்சிற் பதித்து வைக்கற்பாலன, "ஈயாது—இறுகப் பொதியன்மின் இன்றெடு நாளைக் குறுக வருமரோ கூற்று" எனவும், "இருளொடு வைகா திடம்படு ஞாலத் தருளொடு வைகி யகல்" எனவும் "வளமை—வியப்போவ வில்லா வியலிடத்து வெஃகா துயப்போக லெண்ணின் உறும்" எனவுங் கூறி, இறுதியாகக் காடு வாழ்த்து என்னுந் துறையிலே சுடுகாடு எல்லோரையுங் புறங் காண்கின்றது; சாவாதிருந்து அதனைப் புறங்காணுவார் ஒருவருமில்லை எனக் கூறியிருப்பதால் இவ் வாசிரியர் மக்கள்நிலையாமையை உணர்ந்து' அறவழிப்பட்டு ஒழுகுபவராதல் வேண்டும் என்னுங் கருத்துடையவர் என்பது தெள்ளிதின் புலனுகும்.

பல பழைய நூற் கருத்துக்கள் இந்நூலில் ஆங்காங்குப் பயின்று வரக் காணலாம். "ஈம விளக்கிற் பேஎய் மகளிரொ டஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு முதுகாடு, நெஞ்சமர் காதலர் அழுத கண்ணீர், என்பு படு சுடலை வெண்ணீறவிப்ப, எல்லார் புறனுந் தான் கண்டுலகத்து மன்பதைக் கெல்லாந் தானாய்த், தன் புறங்காண்போர்க் காண்பறியாதே" இப்பாட்டின் கருத்து கீழ்வரும் வெண்பாவில் அவ்வாறே அமைந்துள்ளது.

"முன்புறந் தான்காணு மிவ்வுலகை யிவ்வுலகில்
தன்புறங் கண்டறிவார் தாமில்லை—அன்பின்
அழுதார்க ணீர்வடித்த ஆருடிக் கூகைக்
கழுதார்ந் திரவழங்குங் காடு."

"யாங்குப் பெரிதாயினும் நோயளவெனைத்தே
உயிர் செகுக்கல்லா மதுகைத் தன்மையின்
.......................................
ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே"

இப் பாட்டு, தன் பெருங்கோப்பெண்டு துஞ்சிய காலை சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக் கோதை பாடியது. இக் கருத்தை அமைத்துக் கணவனை இழந்த மனைவி கூறியதாக ஒரு வெண்பா அமைத்துள்ளார்.

"புகழொழிய வையகத்துப் பூங்கழற் காளை
திகழொளிய மாவிசும்பு சேர—இகழ்வார்முன்
கண்டே கழிகாத லில்லையால் கைசோர்ந்தும்
உண்டே யளித்தென் உயிர்."

கழிகாதலில்லையால்-கழிந்து படுதற்கேற்ற (இறந்து படுதற்கேற்ற) அன்பில்லை எனப் பொருள் செய்க. "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்" என்னுங் குறட் கருத்து "மொய் யகத்து மன்னர் முரணினி என்னுங்கொல், கையகத்துக் கொண்டான் கழல் விடலை—வெய்ய, விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த, படு சுடர் எஃகம் பறித்து" என்னும் வெண்பாவில் அமைந்துள்ளது.

இந்நூலில் ஒரோ விடத்து துறைப்பெயர் மாறியமைந்துள்ளது போலவும் காணப்படுகின்றது. கொன்று குவித்தல் எனப் பொருள் தரும் 'நூழில்' என்னுந் துறையில் பகைவர் மார்பைப் பிளந்த வேலைக் கையிலே கொண்டு ஒரு வீரன் ஆடுதலைப் பொருந்தினான் எனவும், 'நூழிலாட்டு' என்னுந் துறையில் ஒரு வீரன் வேலைக் காணாது தன் மார்பிற் றைத்துள்ள வேலைப் பறித்துக் கையினிடங் கொண்டான்; இனிமேல் பகைவர் மாறுபாடு என்னாகுமோ என்வும் வந்துள்ளது. ஆகையால் 'நூழில்' என்று இப்போது புத்தகத்தில் காணப்படும் பகுதியில் நூழிலாட்டு என்பதை அமைத்து, நூழிலாட்டு என்னுந் துறைப் பெயர் உள்ளவிடத்து நூழில் என்பதை அமைத்திருப்பின் மிகப் பொருத்தமாக இருக்குமென்று தோன்றுகின்றது.

இந்நூலின்கண் பல உவமைகள் ஆழ்ந்த கருத்தைக் கொண்டு விளங்குகின்றன. யானைகள் மேலே அம்புகள் தைத்து, வெளியே காணப்படுவதற்கு உவமையாக, தினைக்கதிரைக் கொய்த பின்னர் அந்தத் தட்டைகளோடு நின்ற மலையைக்கூறினார். வீரர்கள் வாளை ஒளி வீசும்படி வீசி ஆடியதற்குவமையாக வாளை மீன்கள் பிறழுங் கயத்தைக் குறித்துள்ளார். ஒரு வீரன் யானை தன்மேல் வந்து வீழ, அதன் கீழகப்பட்டு உயிர் துறந்தான். இச்செயலுக்கு உவமையாகப் பெரியதொரு மலையானது முறிந்துவீழ அதன் கண்ணே அகப்பட் டிறந்ததொரு சிங்கத்தைக் கூறியுள்ளார். இவைகளைப்போல அனேக உவமைகளைக் காணலாம்.

இந்நூற்கு, சாமுண்டி தேவநாயகர் இயற்றிய உரையேயன்றி வேறுரையும் உண்டென்பது அவருரையாலேயே விளங்குகின்றது. வெட்சியிலேயுள்ள முதல் வெண்பாவிற்கு உரைசொல்லுமிடத்து 'கொண்ட' என்பதற்கு கையிலே எடுத்துக்கொண்ட வில்லை உடைய வன் "கூர்மையான அம்புகளை ஆராய்தல் கண்டும வேந்து விடை யாயங் கொள்கென்றான்" எனக் கூறிப் பின்னர் அவ்வாறுரைக்காது கொடுஞ்சிலையன் கோறெரியக் கண்டே வேந்து விடையாயங்கொள் கென்றான்; உடனே கொண்ட (ஆநிரை கொள்ளப் பட்டன) என முற்றாக்கிச் சூத்திரத்திற் கேற்பப் பொருளுரைப் பாருமுளர் என்றத னாலும், குடைமுல்லையில (182) எதிர்வழங்கு கொண்மூ இடை போழ்ந்த சுற்றுக் கதிர் வழக்கு மாமலைகாம்பு என்பதற்கு நீர்த்தாரை யை எதிரே சொரியும் மேகம் இடை விட்ட சுற்றுததாமம்; சந்திரா தித்தர் வழங்கும் மாமேரு காம்பு என்று கூறிப் பின்னர் "இடை போழ்ந்து சுற்றிக்கதிர் வழங்கு மாமலை காம்பு" எனப்பாட மோதி மாகத்தைப் பிளந்து சுற்றிக்கதிர் வழங்கு மாமலை காம்பு என்பாரு முளர் என்றதனாலும் வேறுரையும் இதற்கு உண்டென்று தெரிகின் றது. இத்தகைய அரும்பெரும் நூலைத் தமிழ் மக்கள் போற்றிப் பயின்று பயனுறு வாராக.

வாழ்க தமிழ் மொழி.

# காரைக்காலம்மையார்.

திருவாட்டி, சு. கரும்படுசொல்வி அம்மையார், திருவையாறு.

"யாவர்க்கும் தந்தை தாய் தம்பிரான் தனக்கஃதிலான்" ஆகிய இறைவனுக்கு ஒரு அம்மையாகியவர் காரைக்காலம்மையார். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள்" என்று கற்புடை மாதருக்கு வள்ளுவர் கூறிய இலக்கண வரம்பைக் கடந்து தெய்வத்தையும் கணவனையும் ஒருங்கே தொழுது கடவுட் பத்தியையும் கற்பு நெறியையும் ஒருங்கே பேணி உயர்நெறி நின்றவர் காரைக்காலம்மையார். "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்ற ஆன்றோர் மொழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகப் பொருவிடையார் திருவடிக் கீழ் ஓங்கிய அன்புறு, காதல் ஒழிவின்றி மிகப் பெருகப் பாங்கில் வரும் மனை அறத்தின் பண்பு வழாமையில் பயின்றவர் காரைக்காலம்மையார். மாதர் பேதையர் என்னும் கூற்றுப் பேதமையுறும்படி இயல் இசைப் புலமை நிரம்பி இல்லற மாண்பு வாய்ந்து இறையுணர்ச்சி நிரம்பி வாழ்ந்தவர் காரைக்காலம்மையார்.

இவர் காரைக்காற் பட்டினத்தில் வணிகர் குலத்தலைவன் தனதத்தன் செய்த தவத்தின் பயனாய்த் திருமகளே பிறந்தது போல் தோன்றினார். புனிதவதி என்று பெயரிடப் பெற்றார். பிறந்து மொழி பயிலத் தொடங்கிய ஞான்று முதல் உடையவர் பால் நிறைந்த அன்பொடு அழகின் கொழுந்து வளர்வதுபோல் வளர்ந்தார். இல்லிகவாப் பருவம் எய்தினார். தந்தையாகிய தனதத்தன் குலத்தாலும் செல்வத்தாலும் தன்னோடொத்தவனாகிய நாகையில் வாழ்ந்த நிதிபதி என்ற வணிகனது மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியாரை மணம் புரிவித்தான். தங்கள் குடிக்கு அருமைப் புதல்வியார் ஆகையினால் அவரை நாகைக்கு அனுப்ப மனமிசையாது கணவனோடு காரைக்காலிலேயே இல்வாழ்க்கை நிகழ்த்துமாறு தன் மாளிகைக்கு அருகிலேயே அணிமாடம் ஒன்று அமைப்பித்து மகளுக்குக் கொடுக்கவேண்டிய சீதன வரிசைகளெல்லாம் சிறப்ப நல்கினான்.

நிதிபதி மைந்தனும் அன்பும் அறனும் உடையனாய்ப் பண்பும் பயனும் பொலிய இல்லறம் நடத்தினான். புனிதவதியாரும் அவனது இல்வாழ்க்கைக்கு அரும் துணைவியராய்ச் சிவபெருமான் திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருக மனையறத்தின் பண்பும் வழாமல் வாழ்ந்து வந்தார். புனிதவதியார் சிவனடியார் வரின் அவர்க்கு நல்ல திருவமுது அளிப்பர். அவர் விரும்பியபடி செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் தம் தகுதிக்கேற்பக் கொடுப்பர். இங்ஙனம் வாழுநாள் பரமதத்தனுக்கு மாங்கனிகள் ஓரிரண்டு அவன்பால் வந்தார் சிலர் கொடுத்தனர். பரமதத்தன் அவர்கட்குத் தன்னா லாகவேண்டியதைச் செய்து அனுப்பினன். மாங்கனிகளை மனையிற் கொடுக்கப் பணித்தனன். அம்மையார் அக்கனிகளை வாங்கி வைத்திருந்தார்.

ஒரு சிவனடியார் மிகப் பசித்தவராய் மனையினுட் புகுந்தார். திருவமுது ஆயிருந்தது; கறியமுது ஆகும்வரை அடியவர் பசி தாங்க மாட்டார் என அம்மையார் உணர்ந்தார். நாதன், தன் அடியாரைப் பசிதீர்ப்பேன் என அம்மையார் அவர்க்கு அமுது படைத்தார். "விடையவன்றன் அடியாரே பெறலரிய விருந்தானால் பேறிதன்மேல் இல்லை" என்னும் அறிவினராகி அம்மையார் கணவன் "வைக்க" எனக் கொடுத்தனுப்பிய மாங்கனிகள் இரண்டினில் ஒன்றை அடிய வர்க்குப் படைத்து மனமகிழ்ச்சியொடு அமுது செய்வித்தார். "மூப்புறு மத்தளர்வாலும் முதிர்ந்து முடுகிய வேட்கைத் தீப்பசியின் நிலையாலும் அயர்ந்தணைந்த திருத்தொண்டர்" மாங்கனியொடு அமுதுண்டு அம்மையின் செயலைப் பாராட்டிச் சென்றார்.

அவர் சென்ற பின் பரமதத்தன் நடுப்பகலில் மனைக்கு வந்து நீராடி அடிசில் உண்ண அமர்ந்தான். கற்புடைய புனிதவதியாரும் கடப்பாட்டில் ஊட்டுவாராய் இன்னடிசிலைக் கறிகளுடன் முறைப்படி இட்டபின் கணவன் வைப்பித்த மாங்கனிகளில் எஞ்சியிருந்த ஒன்றைக் கலத்துப் படைத்தார். உண்டான் வணிகன். அதன் சுவையின் ஆராமையினால் இதுபோன்றது இன்னொரு பழம் இருக்கின்றதே அதனையும் இடுக என்றான். கொண்டு வருவார் போல் அம்மையார் சென்றார். கனிமேல் கணவன் கொண்ட விருப்பத்தை உணர்ந்தார். அது வாய்க்காவிடின் அவன் மனம் மிக வருந்தும் என்பதை அறிந்தார். ஆனால் அடியவர்க்குப் படைத்த கனி மீண்டும் எவ்வாறு வரும். "அம்மருங்கு நின்றயர்வார்.....................வந்தது மாங்கனியொன்று" (செய்யுள் 25) அதனைக் கொண்டு வந்து மகிழ்ச்சியொடு இட்டார். பரமதத்தன் உண்டான். முன் உண்டதினும் சுவை மிக்கிருந்தது "இதுதான் முன்தரு மாங்கனியன்று மூவுலகினும் பெறற்கரிது பெற்றது வேறெங்கு" என்று கேட்டான். இது கேட்ட அம்மையார் நடுங்கினார். அருளுடையார் அளித்தருளும் செவ்விய பேர் அருள் விளம்பும் திறமன்று. கணவன் உரை தட்டுதல் கற்பு நெறிக்குத் தக்கதன்று, ஆதலால், தரும சங்கடத்தில் அகப்பட்டார். வேறு வழியின்மையால் செய்தபடி சொல்லுவதே கடன் என்று துணிந்து கனி கொடுத்தவர் இறைவன் என்று கூறினார். ஈசனருளால் கிடைத்தது எனக் கூறக் கேட்ட கணவன் அதனை நம்பாமல் அங்ஙனமாயின் இன்னுமொரு கனியை அழைத்துத்தா என்றான். அம்மை அப்புறம் சென்று இறைவனைப் பரவி "ஈங்கி தளித்தருளி ரேல் என்னுரை பொய்யாம்" என்று வேண்ட மாங்கனி அம்மை கைக்கு வந்தது, கணவன் கைக் கொடுத்தார். அதிசயித்து வாங்கினான். மறைந்தது, அஞ்சினான், மனம் தடுமாறினான், அம்மையைத் தெய்வம் என்று கருதினான், அம்மையை விட்டு நீங்கத் துணிந்தான். நிகழ்ந்ததை யாவர்க்கும் தெரிவித்திலன். தொடர்பின்றி ஒழுகலானான்.

(தொடரும்.)

## தஞ்சைக் கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவராயிருந்து, காலஞ்சென்ற நாவலர். பண்டித. திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் நினைவு விழாவின் வரவும் செலவும்.

| வரவு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| பெரியார், ஈ. வே. இராமசாமி, ஈரோடு | 15 | 0 | 0 |
| கி. ஆ. பெ. விசுவநாதம், திரிசிரபுரம் | 50 | 0 | 0 |
| தி. பொ. மாணிக்கவாசகம், திரிசிரபுரம் | 10 | 0 | 0 |
| சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார், | 25 | 0 | 0 |
| N. V. விசுவலிங்கம்பிள்ளை, கோலாலம்பூர் | 20 | 0 | 0 |
| நவாப் T. S. இராசமாணிக்கம், கொல்லம் | 51 | 0 | 0 |
| முதுபெரும்புலவர், இராவுசாகிபு. V. P. சுப்பிரமணியமுதலியார் | 10 | 0 | 0 |
| சைவசச்சிதாநந்த நூற்பதிப்புக் கழகம் | 42 | 0 | 0 |
| V. கணபதி, தஞ்சாவூர் | 20 | 0 | 0 |
| M. வரதராசன் தஞ்சாவூர் | 10 | 0 | 0 |
| இராவ்பகதூர் A. Y. அருளாநந்தசாமிநடார், தஞ்சை | 50 | 0 | 0 |
| R. புண்ணியமூர்த்திபிள்ளை, தஞ்சை | 10 | 0 | 0 |
| குடவாயில், போர்டு உயர்நிலைப் பள்ளி | 15 | 0 | 0 |
| ஆர். வி. சுவாமிநாதன், பாகனேரி | 10 | 0 | 0 |
| புரிசை. சு. முருகேச முதலியார் | 15 | 0 | 0 |
| இ. மா. கோபாலகிருட்டினக் கோன், | 25 | 0 | 0 |
| R. ஏகாம்பரம்பிள்ளை, சென்னை | 10 | 0 | 0 |
| இராவுபகதூர். A. வீரையா வாண்டையார், பூண்டி | 66 | 0 | 0 |
| இராவ்சாகிபு. ஐ. குமாரசாமிபிள்ளை, | 9 | 0 | 0 |
| T. R. சுந்தரம் பிள்ளை, திருப்பூர் | 12 | 0 | 0 |
| P. அருணசல நாட்டார், கோவை | 25 | 0 | 0 |
| இந்தியன் மில்ஸ் Depot., கோவை | 25 | 0 | 0 |
| பொன்னுசாமி, கோவை | 25 | 0 | 0 |
| T. பழனிச்சாமி | 10 | 0 | 0 |
| S. R. வேங்கடகிருஷ்ண முதலியார் | 11 | 0 | 0 |
| D. N. ஆறுமுகம் பிள்ளை | 10 | 0 | 0 |
| சி. உ. சுப. உடையப்ப அம்பலம் | 25 | 0 | 0 |
| உ. இரு. மு. முத்தையா அம்பலம் | 25 | 0 | 0 |
| பெரி. வயி. பெரியண்ண அம்பலம் | 10 | 0 | 0 |
| மு. ந. மு. செல்லையா பிள்ளை, சிவகங்கை | 15 | 0 | 0 |
| சி. உ. சுப. பில்லப்ப அம்பலம், பாகனேரி | 25 | 0 | 0 |
| பெரி. அழ. மு. முத்துக்கருப்பன் செட்டியார் பாகனேரி | 10 | 0 | 0 |
| அரு. கண. அருணசலம் செட்டியார் | 10 | 0 | 0 |
| ராம. அ. அ. சிவ. சிவராமன் செட்டியார் | 30 | 0 | 0 |
| மு. நா. மு. சொக்கலிங்கம் செட்டியார் | 20 | 0 | 0 |
| வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார், பாகனேரி | 31 | 0 | 0 |
| R. V. இலட்சுமய்ய நாயுடு, கோவை | 101 | 0 | 0 |
| L. இராமசாமி ,, | 11 | 0 | 0 |

(இருப்புக)

| வரவு | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| L. பக்தவத்ஸலு | கோவை | 11 | 0 | 0 |
| L. அமிர்தம் | ,, | 11 | 0 | 0 |
| V. இரங்கசாமி | ,, | 11 | 0 | 0 |
| இராவுசாகிபு. ந. பரமசிவம்பிள்ளை, லால்குடி | | 10 | 0 | 0 |
| எம் திருவேங்கடம் பிள்ளை, லால்குடி | | 10 | 0 | 0 |
| P. V. எத்திராசு, சென்னை | | 11 | 0 | 0 |
| R. கோவிந்தராச மூப்பனார் | | 20 | 0 | 0 |
| இராவுசாகிபு. S. சுயம்பிரகாசம் தஞ்சை | | 10 | 0 | 0 |
| A. வர்த்தமான முதலியார், கரந்தை | | 10 | 0 | 0 |
| விண்ணமங்கலம் கிராமத்தார் | | 25 | 0 | 0 |
| இராமையா மழவராயர், கச்சமங்கலம் | | 20 | 0 | 0 |
| T. P. வேதாசலம், திரிசிரபுரம் | | 20 | 0 | 0 |
| M. சிங்காரவேலு சேர்வை, திரிசிரபுரம் | | 25 | 0 | 0 |
| M. C. சண்முகசுந்தரம் சேர்வை ,, | | 25 | 0 | 0 |
| மற்றும் பலர் அளித்த நன்கொடைகளும் சேர்ந்து வரவு ரூ | | 1712 | 4 | 0 |

## செலவு

1. உருவப்படம் படம் பெரிதாய் எழுத 60-0-0 படம் கண்ணாடி போட 25-0-0 சிறிய படம் 2க்கும் துணி செலவு 17-6-0

2. உணவு அளித்தல். ஏழைப் பிள்ளைகளுக்கு அரிசி 46-0-0 சங்கத்தின் பிள்ளைகளுக்கு அரிசி 24-0-0 காய்கறி, பலசரக்குகள் 50-12-0 விறகு, சமயற் கூலி 12-12-0

3. நினைவு விழா. அஞ்சல், பார்சல் வகை 65-0-0 வழிச்செலவு 22-10-0 அச்சுக்கூலி, மாலை 18-14-0 தலைவர்கள் செலவு 12-9-9 உறை, தாள், மை முதலியன 11-13-0 விண்ணப்பம் 1000க்கு 12-0-0 பற்றுச் சீட்டு அச்சு 4-0-0 அமைச்சர் வழிச்செலவு 4-13-0

4. ஐயா வரலாறு வெளியிடல். தாள் 42 0-0 உருவப்பதிவு (பிளாக்) 15-0-0 அச்சுக்கூலி, மேல்தாள் 75-0-0

5. புலவர் கல்லூரிப் பரிசு. த. க. புலவர் கல்லூரி மாணவர்களுக்கு ஐயா அவர்கள் பெயரால் ஆண்டு தோறும் பரிசு வழங்க 1000-0-0 கணக்குகள் அச்சிட செலவு 7-8-3 வரவேண்டிய நிலுவை பாக்கியில் 35-0-0

6. நாட்டார் நூல் நிலையம். க. த. பு. கல்லூரி ஏழை மாணவர்களின் புலவர் தேர்வுநூல்கள் வாங்க 150-0-0 ஆக செலவு. 1712-4-0

அச்சடிக்கப் பெற்றுள்ள மற்றையபடிகள் கண்காணிப்பிற்காக இருக்கின்றன. 7, 20, 25 படிகள் நண்பர்களிடமிருந்து பலமுறை எழுதியும் கேட்டும், பணமும் படியும் திரும்பிவந்து சேரவில்லை. இவர்களின் பெயர்களைப் பின்னர் வெளியிடப்பெறும்.

(Sd.) அ. விரையா வாண்டையார், தலைவர். (Sd.) கி. ஆ. பெ. விசுவநாதம்,
(Sd.) அ. வடிவேல் சோழகர், அமைச்சர். — கணக்கரும் பொருளாளரும்.

# இரங்கற் கூட்டம்

சென்னைக் கோகலே மண்டபத்தில் 4—4—44 மாலை நாட்டார் மறைவு குறித்து இரங்கற்கூட்டம் கூட்டப்பெற்றது. பெருஞ்சொல் விளக்கனார் அ. மு. சரவண முதலியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

பெரும்புலவர் இளவழகனார், வரதராசனார், மு. இராசாக்கண்ணனார், பாலூர் கண்ணப்ப முதலியார், புலவர், ஞா. தேவநேயனார், சொ. அருணாசல தேசிகர், அ. கி. பரந்தாமனார், இ. கே. நடேச பிள்ளை, R. S. சாம்பசிவசர்மா, S. ஆறுமுக முதலியார், பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், முத்து, சு. மாணிக்க வாசக முதலியார், கிருஷ்ணவேணி அம்மையார், மயிலை, சிவ. முத்துக்குமார சாமி முதலியார், முதலிய தமிழறிஞர்கள் நாட்டாரின் மறைவு குறித்து, வருந்தி அவ்வருத்தத்தை அறிவிக்கு முகத்தான் சொற்பொழிவாற்றினார்கள்.

நாட்டார் அவர்களின் திருவுருவப்படத்தை திருவாளர் வித்துவான் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M. A. B. L. M. O. L. அவர்கள் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்தலைவர் திரு சரவண முதலியார் அவர்கள் பேசுகையில் காலஞ்சென்ற நாட்டார் அவர்கள் உயர்ந்த படிப்பாளி என்றும், உயர்ந்த நெறியோடு கூடியவரென்றும் ஒருதவறும் அவரிடத்தில் காணமுடியாதென்றும் நாடுகாக்கும் காவலர்க்கும் தலைவணங்காத் தலைவரென்றும் பொருள் உள்ளவனைப் பொருள் கருதி அவர் மதிப்பதில்லை என்றும் நிமிர்ந்து செல்லும் இயல்புடையவரென்றும் அறிவாளியென்றால் படிப்பாளி என்றால் அவரிடம் பணிவாரென்றும் ஒருவர்மீதும் அவருக்குப்பொறாமை ஏற்பட்ட தில்லை என்றும் சூழ்ச்சியினால் புகழ் தேடும் புத்தி நுட்பம் இல்லாதவரெனறும் திருவருளை உண்மையாகவே நம்பினவரெனறும் இவரது மறைவு தமிழுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பென்றும் குறிப்பிட்டார்கள்.

---

## ந. மு. வே. நாட்டார் நினைவு நாள்.

---

நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் 28—3—44ல் இறைவனடி எய்தியமையால் அவருடைய 60ம் ஆண்டு நிறைவிழாவை நினைவு விழாவாக மாற்றி, வாழ்க்கை வரலாறு வெளியிடுதல், கரந்தைப்புலவர் கல்லூரியில் அவர் பெயரால் பரிசு வழங்க மூலப்பொருள் ஏற்படுத்தல், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில், அவர் படத்தைத் திறந்து வைத்தல், ஏழைகளுக்கு உணவளித்தல் முதலியன செய்ய விழாக் கழகத்தினர் முடிவு செய்துள்ளனர். ஆகையின் நாவலர் அவர்களுடைய நண்பர்கள், மாணவர்கள், தமிழன்பர் முதலியோர் முன்வந்து பொருளுதவி செய்யுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர். பொருளை K. A. P. விசுவநாதம், மணிவாசகத்தமிழகம், திருச்சி என்ற முகவரிக்கு அனுப்பியருளுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

A. வடிவேலர்,

செயலாளர்.

Regd. No. M. 4192

உ

தமிழ்த்தாய் வாழ்க

# கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

## சங்க உறுப்பினர்.

திங்கள் வரி—குறைந்தது நான்கணா. ஆயுள் வரி ஐம்பது ரூபா.

## நூல்நிலைய உறுப்பினர்.

சங்க உறுப்பினர்க்கு அரையாண்டிற்கு எட்டணா. பிறர்க்குச் சேர்ப்புக் கட்டணம் எட்டணா; திங்கள் வரி நான்கணா.

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| முன் பணம் | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஆயுள்வரி | ௨௫ | 0 | 0 | ௨௫ | 0 | 0 |
| ஆண்டுவரி: | | | | | | |
| சங்க உறுப்பினருக்கு | ௨ | 0 | 0 | ௨ | ௮ | 0 |
| ஏனையர்க்கு | ௩ | 0 | 0 | ௩ | ௮ | 0 |

## பழந்தொகுதிகள்—குறைந்த விலை.

1, 2, 4—8 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௧ 0 0

3, 12, 14, 16 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௩ 0 0

9, 10, 11, 13 தொகுதிகள் நீங்கலாக 1 முதல் 14 முடிய 10 தொகுதிகளையும் மொத்தமாக வாங்கினால் ரூ. ௰௭ 0 0

(அஞ்சற்செலவு வேறு)

9, 10, 11, 13, 15, 17, 18, 19 தொகுதிகள் செலவாகி விட்டன.

குறிப்பு:—தமிழ்ப் பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21-ஆம் நாளே குறைந்த அஞ்சற்செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்களில் அனுப்பும்படி வேண்டுபவர் முழு அஞ்சற்றொகையையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

---

வெளியிடுவோர் :—

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை,

கரந்தை, தஞ்சை.

# தமிழன்பர்களுக்கு ஓரறிவிப்பு

புதுக்கோட்டைத்தனியரசிலுள்ள மேலைச்சிவபுரி திரு. கணேசர் செந்தமிழ்க் கலாசாலை, சென்னைப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்று வித்துவான் தேர்வுக்கு மாணவர்களைப் பயிற்றுவித்து வருகிறது.

தக்கபுலவர்களால் கல்வி இலவசமாகப் பயிற்றுவித்துவருகிறது. கலாசாலையின் தொடர்பில் நூல்நிலையமும் உணவு விடுதியும் (Hostel) மருத்துவசாலையும் தக்க முறையில் அமைக்கப்பெற்றுள்ளன. கோடை காலவிடுமுறைக்குப்பின் கலாசாலை **1944**ம் ஆண்டு சூலைமீ **3**-ஆம் நாள் தொடங்குகிறது. கலாசாலையிற் சேரவிரும்பும் மாணவர்கள் **1944**ம்ஆண்டு சூன்மீ **15** ஆம் நாளுக்குள் கல்லூரி முதல்வருக்கு நற் சான்றுத் தாளுடன் விண்ணப்பத்தாள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்.

**குறிப்பு:**—விண்ணப்பத்தாள் வேண்டுவோர், Correspondent திரு. கணேசர் செந்தமிழ்க் கலாசாலை மேலைச்சிவபுரி, புதுக் கோட்டை ஸ்டேட் என்ற முகவரிக்கு ஒன்றரையணாத் தபாற்றலை யனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

மேலைச்சிவபுரி
*30—4—'44*

அ. வ. இராமநாதச் செட்டியார்,
கல்லூரிமுதல்வர்.

Regd. No. M. 4192

உ

தமிழ்த்தாய் வாழ்க

# கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

## சங்க உறுப்பினர்.

திங்கள் வரி—குறைந்தது நான்கணா.     ஆயுள் வரி ஐம்பது ரூபா.

## நூல்நிலைய உறுப்பினர்.

சங்க உறுப்பினர்க்கு அரையாண்டிற்கு எட்டணா. பிறர்க்குச் சேர்ப்புக் கட்டணம் எட்டணா: திங்கள் வரி நான்கணா.

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| முன் பணம் | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஆயுள்வரி | ௨௫ | ௦ | ௦ | ௨௫ | ௦ | ௦ |
| ஆண்டுவரி: | | | | | | |
| சங்க உறுப்பினருக்கு | ௨ | ௦ | ௦ | ௨ | ௮ | ௦ |
| ஏனையர்க்கு | ௩ | ௦ | ௦ | ௩ | ௮ | ௦ |

## பழந்தொகுதிகள்—குறைந்த விலை.

1, 2, 4—8 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௧ ௦ ௦

3, 12, 14, 16 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௩ ௦ ௦

9, 10, 11, 13 தொகுதிகள் நீங்கலாக 1 முதல் 14 முடிய
10 தொகுதிகளையும் மொத்தமாக வாங்கினால் ரூ. ௰௭ ௦ ௦

(அஞ்சற்செலவு வேறு)

9, 10, 11, 13, 15, 17, 18, 19 தொகுதிகள் செலவாகி விட்டன.

குறிப்பு:—தமிழ்ப் பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21-ஆம் நாளே குறைந்த அஞ்சற்செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்களில் அனுப்பும்படி வேண்டுபவர் முழு அஞ்சற்றொகையையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

வெளியிடுவோர்:—

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை,

கரந்தை, தஞ்சை.

# நக்கீரர் கழகம், சென்னை
## திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி
(THIRUVALLUVAR TAMIL COLLEGE)

**அன்புடையீர்,**

திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி 7–2–'44ல் திறக்கப்பட்டது. இக்கல்லூரியில் திங்கட்கிழமை 6–3–'44 முதல், வகுப்புப் பாடங்கள் முறையே நடைபெறும்.

**இடம்:** "தென்னிந்திய பிரம்ம சமாஜ பாடசாலை" 135, அண்ணாப் பிள்ளைத் தெரு ஜி. டி., சென்னை.

**காலம்:** திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மாலை 6–30 மணி முதல் 8 மணி வரை.

**ஆசிரியர்கள்:** திரு. கா. ர. கோவிந்தராச முதலியார்: தலைவர் (Principal) திரு. கு. பாலசுந்தர முதலியார்: துணைத்தலைவர் (Vice-Principal) திரு வித்துவான் மு. சு. கண்ணபிரான் முதலியார் திரு வித்துவான் கோ. செல்வபதி முதலியார் திரு. வித்துவான் ஐ. ப. இராசசேகர நாயகர் **விரிவுரையாளர்கள் குறிப்பு:** 1. கல்லூரி தற்போது பிரலிமினரி 1946 தேர்வுக்குப் பாடம் தொடங்கியுள்ளது. 2. கல்லூரியில் சேர விரும்புவோர், கல்லூரி நிலையத்தில் ("தமிழகம்" 27, கொண்டலையர் தெரு) விண்ணப்பம செய்துகொள்ளல் வேண்டும். 3. கட்டணம் மாதம் ஒன்றுக்கு அண 8 செலுத்தல் வேண்டும். ஏழை ஆயின் மேற்படி கட்டணம் செலுத்தல் வேண்டா. 4. மாணவர்கள் S. S. L. C. தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், வித்துவான் நுழைவுத்(Entrance Examination) தேர்வில் தேறியவர்களாயும் இருத்தல் நலம் 5. மற்ற விவரங்கள் மேற்படி கல்லூரி நிலையத்தில் அறிக்கைப் பலகையிற் கண்டுகொள்க. **தமிழ்ச் செல்வர்காள், வருக!** வருக! தமிழ் பருகுவீர்களாக. தங்கள் ஓய்வு நேரத்தை வீணே செலுத்தல் வேண்டா. தமிழ் கற்று, கலை உணர்ச்சி பெற்று, இன்பம் பெறுக; வருக. இன்றே சேர்மின் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில்.

நிலையம், "தமிழகம்"<br>27, கொண்டலையர் தெரு,<br>ஜி. டி சென்னை.

**சிறுவை, நச்சினார்க்கினியன்,**<br>அமைச்சன்.

## தமிழ் மாணவர் மறைவு

14-ம் வயதில் E. S. L. C. யில் வெற்றி பெற்றவரும், 17-ம் வயதில் மதுரைத் தமிழ்ச்சங்கப் பிரவேசத்தேர்வில் முதன்மையாகத் தேர்ந்து, தங்கப் பதக்கம் பெற்றவரும், 19-ம் வயதில் பிரிலிமினரி (தமிழ் இளம்புலவர்) வகுப்பில் தேர்ந்து 1945-ம் யாண்டு வித்துவான் முடிவுத்தேர்விற்குப் போக முன்னணியில் நின்றவரும், 'ஸ்ரீமத்சிவஞானபாலைய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி'யின் சிறந்த அறிவாளியுமாகிய இரட்டணை வை. இராசாராம் என்னும் மாணவர் திடீரென்று ஏற்பட்ட நிமோனியா சுரத்தினால் 11-7-'44 செவ்வாய்க் கிழமையன்று தமிழ்த்தாயின் திருவடியை எய்தினர்.

Regd. No. M. 4192

உ

தமிழ்த்தாய் வாழ்க

# கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

## சங்க உறுப்பினர்.

திங்கள் வரி—குறைந்தது நான்கணா. ஆயுள் வரி ஐம்பது ரூபா.

## நூல்நிலைய உறுப்பினர்.

சங்க உறுப்பினர்க்கு அரையாண்டிற்கு எட்டணா. பிறர்க்குச் சேர்ப்புக் கட்டணம் எட்டணா ; திங்கள் வரி நான்கணா.

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| முன் பணம் | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஆயுள்வரி | ௨௫ | 0 | 0 | ௨௫ | 0 | 0 |
| ஆண்டுவரி: | | | | | | |
| சங்க உறுப்பினருக்கு | ௨ | 0 | 0 | ௨ | ௮ | 0 |
| ஏனையர்க்கு | ௩ | 0 | 0 | ௩ | ௮ | 0 |

## பழந்தொகுதிகள்—குறைந்த விலை.

1, 2, 4—8 தொகுதிகள் → தொகுதி ஒன்று. ரூ. ௧ 0 0

3, 12, 14, 16 தொகுதிகள் -- தொகுதி ஒன்று ரூ. ௩ 0 0

9, 10, 11, 13 தொகுதிகள் நீங்கலாக 1 முதல் 14 முடிய
10 தொகுதிகளையும் மொத்தமாக வாங்கினால் ரூ. ௰ 0 0

(அஞ்சற்செலவு வேறு)

9, 10, 11, 13, 15, 17, 18, 19 தொகுதிகள் செலவாகி விட்டன.

குறிப்பு:—தமிழ்ப் பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21-ஆம் நாளே குறைந்த அஞ்சற்செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்களில் அனுப்பும்படி வேண்டுபவர் முழு அஞ்சற்றொகையையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

---

வெளியிடுவோர் :—

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை,

கரந்தை, தஞ்சை.

# தமிழ் வித்துவான் சங்கம், சென்னை

அன்புடையீர்!

17—10—44-ல் கூடிய நம் வித்துவான் சங்கச்செயற்குழு கீழ்க்கண்ட முடிபுகளைச் செய்திருக்கின்றது.

1 வித்துவான் பட்டம் பெற்றவர்கட்கு நடுநிலைப்பள்ளிகளில் ரூ 45-5-75-ம் உயர்நிலைப்பள்ளிகளில் ரூ 60-5-100-ம் ஊதியமாக ஏற்படுத்தவேண்டும். 2. (அ) சென்னை, திருச்சி வானொலி நிலையங்களில் பேசப்படும் தமிழிலக்கிய சம்மந்தமான பேச்சுக்களெல்லாம் தமிழாசிரியர்கட்கே கொடுக்கப்படவேண்டும். (ஆ) ஷ நிலையங்களில் தமிழ்ப்பேச்சுக்களைப் பார்வையிடுதற்கும் தமிழ் நிகழ்ச்சி முறைகளை வகுப்பதற்குமாக ஒவ்வொரு தமிழ்ப்புலவரை ஏற்படுத்த வேண்டும். 3. (அ) பத்தாம் வகுப்புத்தேர்வில் மொழி பெயர்ப்பு வினாத்தாளை நீக்கிவிட வேண்டும் (அது எந்த வகையிலும் தமிழ்த்தேர்வைத் தெரிவிப்பதல்ல). (ஆ) ஆங்கிலத்தைப்போலத் தமிழிலும் 2 வினாத்தாள்கள் அதே நேர அளவில் இருக்க வேண்டும். (இ) ஷ விடைத்தாள்களைத் திருத்துவதற்காக அளிக்கப்படும் ஊதியமும் ஆங்கிலத்திற்கு அளிப்பதுபோலவே இருக்கவேண்டும். (ஈ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வுகளில் கண்காணிப்போர் பணி (Supervision Work) தமிழாசிரியர்கட்கும் அளிக்கப்படவேண்டும். 4. கட்டுரைத் திருத்தத்திற்காக, இருக்கும் வேலையைப்பொறுத்து, எல்லாப்பள்ளிகளிலும் தனியே வேறு தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். 5. தமிழிற்கென வாரத்தில் 7 அகவைகள் (periods) எல்லாப்பள்ளிகளிலும் இருக்க வேண்டும். 6. விஞ்ஞானம் முதலிய துணைப்பாடங்களைத் தமிழில் நடத்தும் L. T. முதலிய ஆசிரியர்கள், தமிழை இரண்டாவது மொழியாகக்கொண்டு படித்தவர்களாக இருக்கவேண்டும். 7. தொடக்கப்பள்ளி முதல் கல்லூரி முடிய உள்ள வகுப்புக்களுக்கெனப் புதிய பாடத்திட்டங்கள் அமைக்கவேண்டும். (ஐவர் கொண்ட உட்கழகம் ஒன்று அமைக்கப்பட்டது).

மேற்கூறியன முடிந்த முடிபுகள் அல்ல. தமிழாசிரியர்களின் ஆய்வுக்கென இம் முடிபுகளை வித்துவான் சங்கச் செயற்குழு விடுத்துள்ளது. இவை பற்றிய உங்கள் கருத்துக்களையும், இன்னும் தமிழ்-தமிழாசிரியர் உயர்வு குறித்து நீங்கள் கருதுவனவற்றையும் உடனே எழுதி அனுப்ப வேண்டுகிறோம். இவற்றை எல்லாம் ஆய்ந்து வழிவகைகள் காண்பதற்கும் மேற்கொண்டு செயன்முறைகள் செய்வதற்குமாக நவம்பர் இரண்டாம் வாரத்தில் தமிழாசிரியர்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடும். அதில் தாங்களும் பங்கு கொண்டு வேண்டுவன செய்ய வேண்டுகிறோம்.

2, சாலை விநாயகர்
கோவில் தெரு
ஜி. டி. சென்னை

மு. இராசாக்கண்ணு,
அன்பு கணபதி,
செயலாளர்.

Regd. No. M. 4192

உ

தமிழ்த்தாய் வாழ்க

# கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

## சங்க உறுப்பினர்.

திங்கள் வரி—குறைந்தது நான்கணா. ஆயுள் வரி ஐம்பது ரூபா.

## நூல்நிலைய உறுப்பினர்.

சங்க உறுப்பினர்க்கு அரையாண்டிற்கு எட்டணா. பிறர்க்குச் சேர்ப்புக் கட்டணம் எட்டணா; திங்கள் வரி நான்கணா.

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| முன் பணம் | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஆயுள்வரி | ௨௫ | 0 | 0 | ௨௫ | 0 | 0 |
| ஆண்டுவரி: | | | | | | |
| சங்க உறுப்பினருக்கு | ௨ | 0 | 0 | ௨ | ௮ | 0 |
| ஏனையர்க்கு | ௩ | 0 | 0 | ௩ | ௮ | 0 |

## பழந்தொகுதிகள்—குறைந்த விலை.

1, 2, 4—8 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௧ 0 0

3, 12, 14, 16 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௩ 0 0

9, 10, 11, 13 தொகுதிகள் நீங்கலாக 1 முதல் 14 முடிய
10 தொகுதிகளையும் மொத்தமாக வாங்கினால் ரூ. ௰ 0 0

(அஞ்சற்செலவு வேறு)

9, 10, 11, 13, 15, 17, 18, 19 தொகுதிகள் செலவாகி விட்டன.

குறிப்பு:—தமிழ்ப் பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21-ஆம் நாளே குறைந்த அஞ்சற்செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்களில் அனுப்பும்படி வேண்டுபவர் முழு அஞ்சற்செலவையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

வெளியிடுவோர் :—

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை,

கரந்தை, தஞ்சை.

## பொழிலுறுப்பினர் பொறுத்தருள்வாராக!

நம் தமிழ்ப் பொழிலுக்கு வேண்டிய தாள்களை முறைப்படி, தந்துதவ உடன்பட்ட கழகத்தார் முறைப்படியே தாள் அனுப்பியும் குறித்தகாலத்தில் தாள் வந்து சேராது புகைவண்டித் தொடர்பில் ஏற்பட்ட கால, பிற்பாட்டுச்செயலால் இத்திங்கள், தமிழ்ப்பொழிலை எட்டு, பக்கங்களுடன் வெளியிடவேண்டி ஏற்பட்டது. இனி அடுத்து வரும்பொழிலின் பக்கங்களைப்பெருக்கி முன்போல் வெளியிடுவேமென அறிவிக்கின்றேம். உலகப் பெரும்போர் காரணமாக ஒருதிங்களும் பதினைந்து நாட்களும் கழிந்தும் பம்பாயிலேற்றியனுப்பிய தாள் எம் கைக்கு இன்னும் வந்துசேரவில்லை. இனி இத்தகு முட்டுப்பாட்டிற் கிடனின்றிப் பொழிலை வெளியிடுவேம் என்பதனைப் பொழிலுறுப்பினர்கட் கறிவிக்கின்றேம். இதுபோது ஏற்பட்ட இக்குறைபாட்டினைப் பொழிலுறுப்பினர்கள் பொறுத்தருள்வாராக!

இங்ஙனம்,
பொழிலாசிரியர்.

## தஞ்சைத் தமிழிசைக் கல்லூரி, கரந்தை.

தஞ்சை மாவட்டத் தமிழிசைச் சங்கச்சார்பில் தமிழிசைக் கல்லூரி அண்மையில் திறக்கப்பெறும். பெருங்கொடை வள்ளல், அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் ஆதரவும், இசைப் பேராசிரியர். க. பொன்னையா பிள்ளை அவர்களின் ஆதரவும் கொண்டு நாட்டப்பெறும் இக்கல்லூரி பொருள் வளமும் இசைவளமுங் கொண்டு நன்கு வளர்ந்தோங்குமென எண்ணுகின்றேன். தமிழிசை அன்பர்கள் தஞ்சை மாவட்டத் தமிசைச் சங்க உறுப்பினராகிச் சங்கத்தையும் கல்லூரியையும் சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
ஐ. குமாரசாமிப் பிள்ளை.

Regd. No. M. 4192

உ

தமிழ்த்தாய் வாழ்க

# கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

---

## சங்க உறுப்பினர்.

திங்கள் வரி—குறைந்தது நாலணா. ஆயுள் வரி ஐம்பது ரூபா.

---

## நூல்நிலைய உறுப்பினர்.

சங்க உறுப்பினர்க்கு அரையாண்டிற்கு எட்டணா. பிறர்க்குச் சேர்ப்புக் கட்டணம் எட்டணா: திங்கள் வரி நாலணா.

---

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

---

| முன் பணம் | உள்நாடு. ரூ. | அ. | பை. | வெளிநாடு. ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| ஆயுள்வரி | உ௫ | ௦ | ௦ | உ௫ | ௦ | ௦ |
| ஆண்டுவரி: | | | | | | |
| சங்க உறுப்பினருக்கு | உ | ௦ | ௦ | உ | ௮ | ௦ |
| ஏனையர்க்கு | ௩ | ௦ | ௦ | ௩ | ௮ | ௦ |

## பழந்தொகுதிகள்—குறைந்த விலை.

1, 2, 4—8 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௧ ௦ ௦

3, 12, 14, 16 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௩ ௦ ௦

3, 9, 10, 11, 13 15, தொகுதிகள் நீங்கலாக 1 முதல் 16 முடிய 10 தொகுதிகளையும் மொத்தமாக வாங்கினால் ரூ. ௰௫ ௦ ௦

(அஞ்சற்செலவு வேறு)

3, 9, 10, 11, 13, 15, 17, 18, 19 தொகுதிகள் செலவாகிவிட்டன.

குறிப்பு:—தமிழ்ப் பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21-ஆம் நாளே குறைந்த அஞ்சற்செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்களில் அனுப்பும்படி வேண்டுபவர் முழு அஞ்சற்செலவையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

---

வெளியிடுவோர்:—

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை,
கரந்தை, தஞ்சை.

## பன்னீர்ச் செல்வனார் பணியினை நினைமின் !

காலஞ்சென்ற சர். A. T. **பன்னீர்ச்செல்வம்** அவர்கள் நம் நாட்டிற்கும் நம் மொழிக்கும் ஆற்றியுள்ள அளப்பரும் பணிகளை நினைவு கூரு முகத்தான் பன்னீர்ச்செல்வம் நினைவுக்குறி ஏற்படுத்துவான் வேண்டி நம் சங்கத்தலைவர் இராவு பகதூர் A. Y. **அருளானந்தசாமி நாடார்** அவர்களும், இராவு சாகிபு. **ஐ. குமாரசாமி பிள்ளை** B. A. அவர்களும் முயன்று வருகின்றனர். இவர்கள் முயற்சிக்கு உறுதுணையாகத் தமிழ்நாட்டிலுள்ள பல செல்வர்கள் ஆயிரக்கணக்கில் பொருள் தருவதாக உறுதிகூறிக் கையெழுத்துமிட்டுள்ளனர். இவர்களின் முயற்சியை யாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

சர். பன்னீர்ச் செல்வம் அவர்க ளின்றேல் திருவையாற்றில் அரசர் கல்லூரியில் தமிழ்மொழிக் கிடங்கிடைத் திருக்குமோ ? தமிழ் நாட்டில் இத்துணைத் தமிழ்ப்புலவர்கள் தமிழர்களுள் தோன்றியிருத்தற்கியலுமோ ? பன்னீர்ச்செல்வம் பணியாலன்றோ த. வே. உமாமகேசுவரனார் உழைப்பாலன்றோ ஐயாற்றில் தமிழ்பயிலத் தமிழர்க்கு இடங்கிடைத்தது. இவ்விரு பெரியோர்களையும், தமிழர்கள் என்றும் உளத்தில் வைத்துப் போற்றுங் கடப்பாடுடையர்.

தஞ்சை நாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் பெரும்புகழ் அளித்த பன்னீர்ச்செல்வம் அவர்கட்கு நினைவுக்குறி நிறுவுதலைத் தமிழர் விருப்புற ஆதரிக்கக் கடமைப் பட்டுள்ளளனர். தத்தம்மாலியன்ற உதவி புரியவுங் கடமைப்பட்டுள்ளனர்.

தஞ்சை மாவட்ட நாட்டாண்மைக் கழகத்திலும், நகராண்மைக் கழகத்திலும் சர். பன்னீர்ச்செல்வம் தலைவராயமர்ந்து பணிபுரிந்த காலையில் அவர் ஆதரவால் பதவியேற்ற தமிழர் பலர் இந்நாட்டிலுளர். சர். பன்னீர்ச்செல்வம் சென்னைமண்டில அகமந்திரத் தலைவராய் அமைந்திருந்த காலையிலும், சென்னைமண்டில அமைச்சருள் ஒருவராகத்திகழ்ந்த காலையிலும் அவர் ஆதரவுபெற்று அன்பினைப் பெற்றுப் பதவியிலுயர்ந்தவர்களும், பதவி பெற்றவர்களும் எத்துணையோ பேருளர். இவர்கள் யாவரும் தம் கடமையை யுணர்ந்து இம்முயற்சிக்கு ஆதரவளிப்பார்களானால் பன்னீர்ச்செல்வம் நினைவுக்குறி நிறுவுதல் மிக வெற்றியுடன் பிறர் பாராட்டு முறையில் நிறைவுறுமென்பதிலையமுண்டோ ? இவர்கள் யாவரும் இந்நற் பணியில் ஒத்துழைத்துத் தஞ்சைமா நாட்டின் சீர் விஞ்சியெங்கும் பரவ வேண்டியன புரிவாராக.

சர். A. T. பன்னீர்ச்செல்வம் அவர்கள் இலந்தன்மாநகரில் இந்திய அமைச்சருக்கு ஆய்வுரை தருவோராக அமர்த்தப் பெற்றுச் சென்ற காலையில் பன்னீர்ச்செல்வம் அவர்களை எம் **கரந்தைப்புலவர் கல்லூரி**, வரவேற்று அவர்கட்களித்த பாராட்டுப்பாவில் செல்வம் அவர்கட்கு நினைவுக்குறி ஏற்படுத்தப்பெறும் எனக்கூறியது. அப்பாவினை அன்பர்களின் பொருட்டுக் கீழே தருகின்றோம்.

> தமிழ்நாட்டிற் றமிழ்த்தழைக்கத் தகவிலா ரெதிர்ப்பையெலாந் தடிந்து நின்றே
> தமிழ்நாட்டோர் ஐயாற்றில் தமிழ்ப்பயிலத் தகவுடனே தக்க செய்தாய் !
> தமிழ்நாட்டில் நின்செயலால் தமிழறிஞர் பலரானார் தகைமை யாள !
> தமிழ்நாட்டில் நின்படிமச் சிலைநாட்டி வாழ்த்திடுவேம் தமிழர் வாழ்வே !

இங்ஙனம் அக்காலை எம் புலவர் கல்லூரி கூறிய மொழிகள் பொய்க்காமல் மெய்யாகப்போதலையறிந்து யாம் பெரிதும் மகிழ்கின்றோம்.

இங்ஙனம்,

**பொழிலாசிரியர்.**

Regd. No. M. 4192

உ

தமிழ்த்தாய் வாழ்க

# கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

## சங்க உறுப்பினர்.

திங்கள் வரி—குறைந்தது நாலணா. ஆயுள் வரி ஐம்பது ரூபா.

## நூல்நிலைய உறுப்பினர்.

சங்க உறுப்பினர்க்கு அரையாண்டிற்கு எட்டணா. பிறர்க்குச் சேர்ப்புக் கட்டணம் எட்டணா; திங்கள் வரி நாலணா.

## தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| முன் பணம் | உள்நாடு. | | | வெளிநாடு. | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஆயுள்வரி | ௨௫ | 0 | 0 | ௨௫ | 0 | 0 |
| ஆண்டுவரி: | | | | | | |
| சங்க உறுப்பினருக்கு | ௨ | 0 | 0 | ௨ | ௮ | 0 |
| ஏனையர்க்கு | ௩ | 0 | 0 | ௩ | ௮ | 0 |

## பழந்தொகுதிகள்—குறைந்த விலை.

1, 2, 4—8 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௧ 0 0

3, 12, 14, 16 தொகுதிகள் — தொகுதி ஒன்று ரூ. ௩ 0 0

9, 10, 11, 13 தொகுதிகள் நீங்கலாக 1 முதல் 14 முடிய
10 தொகுதிகளையும் மொத்தமாக வாங்கினால் ரூ. ௰௪ 0 0

(அஞ்சற்செலவு வேறு)

9, 10, 11, 13, 15, 17, 18, 19 தொகுதிகள் செலவாகி விட்டன.

குறிப்பு:—தமிழ்ப் பொழில் ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 21-ஆம் நாளே குறைந்த அஞ்சற்செலவில் அனுப்பப்பெறுவது. பிறநாட்களில் அனுப்பும்படி வேண்டுபவர் முழு அஞ்சற்றொகையையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

---

வெளியிடுவோர்:—

கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை,

கரந்தை, தஞ்சை.